

Registered with the Registrar of Newspaper for India under RNI No: TNTAM/2010/32978


சிங்கப்பூர் - மலேசியா - தாய்லாந்து 10 நாட்கள்







கோலாலம்பூர்

சிங்கப்பூர்


ஆகஸ்ட் 12 முதல் 21 வரை

Rs.70,000/-

செப்டம்பர் 10 முதல் 19 வரை

இலங்கை 7 நாட்கள்







26.08.10 முதல் 01.09.10 வரை

Rs.48,000/-

26.09.10 முதல் 02.10.10 வரை

Malolaa Tours

மாலோலா டூர்ஸ்

For More Details Visit our www.malolaatours.com


# தேவதையின் கொலுசு

ஆகஸ்ட் 2010

ரூ.8/-

மாத நாவல்

## இந்திரா சௌந்தரராஜன்





பாரததேவியின் சிறுகதை

யோசிக்க வைக்கும் போட்டிகள்..

மனம் நிறைக்கும் பரிசுகள்!

# மர்ம வீடு!

# இந்திரா சௌந்தரராஜன்



# மர்ம வீடு!

## ◀◀ 1 ▶▶

'மனத்தைப் பற்றி டாக்டர் ஆனந்தமோகன் சுவாரஸ்யமான புத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார். 'எது மனது?' என்று கேட்டுத்தான் தன் விளக்கத்தையே தொடங்குகிறார். 'மனது' என்றவுடன் கைகள் தானாக மார்பைத் தொட்டுக் காட்டும். மார்புப் பகுதியில் இதயம்தான் இருக்கிறது. அது சிறந்த மோட்டார் போல் ரத்தத்தை சதா இறைத்துக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்! அது எப்படி எண்ணங்களால் சூழப்பட்ட மனம் ஆகும்?

அப்படியானால், தலையின் பின் பகுதியைத் தட்டி மூளை இருக்கும் இடத்தில் மனசு இருப்பதாகச் சொல்லலாமா?

அதுவும்கூட தப்புதானாம்!





ஆனந்த மோகன் சொல்கிறார்:

உண்மையில், 'மனது எங்கே இருக்கிறது?' என்கிற கேள்விக்குள் நாம் விழும்போது நெற்றிப் பொட்டுகள் குறுகுறுக்கின்றன. கண்களுக்குப் பின்னாலே தாழ்வாரம் போல ஒரு இடம் இருக்கிற மாதிரியும், அதில் பாயை விரித்து பாடா படுத்திருக்கிற மாதிரியும் மனது அங்கேதான் இருக்க வேண்டும் என்றும் நமக்குத் தோன்றலாம்.

ஆனால் அதுவும் கூடத் தப்புதானாம். மனது ஒன்றும் உடம்பின் ஒரு உறுப்பு போன்றதில்லையாம்! உடம்பில் அதற்கு ஒரு இடத்தைத் தேடுவது அபத்தமாம். ஒரு சுண்டு விரலை உற்றுப் பார்த்து அங்கே மனது இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளத் தொடங்கினால், மனம் அங்கே நிலை கொள்கிறதாம்.

மனத்தை எங்கு வேண்டுமானாலும் நிலை நிறுத்தலாம். நமது உடம்பில் என்றில்லாமல் வெளியே யாரிடமும்.. ஏன், ஒரு மதில் சுவர் மேல், மரக் கிளை மேல், அதில் தாவிக் குதித்து ஓடும் அணில் மேல் என்று எதன் மேலும் மனத்தைக் குவிக்கலாம் என்கிறார்.

இதை எல்லாம் கேட்கும்போது குழப்பமாக இல்லை..?'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

**வி**டிந்து விட்டது!

கதவைத் திறந்து பார்த்தபோது, வராண்டாவில் பேப்பரும் பால் பாக்கெட்டும் காத்திருந்தன.

சன்னமாய் ஒரு கொட்டாவி பிரிய அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே சென்றாள் உஷா.

நள்ளிரவில் ஒரு ஒரு மணி நேரம் ஓங்கலாய் மழை பெய்திருந்தது. அந்த ஈரத்தில் சுருங்கியிருந்தது வாயில் புறத்துப் பன்னீர் மரம்.

தரையில் அது உதிர்த்திருக்கும் 'பீப்பீ' பூக்கள்!

விளக்குமாற்றால் அவற்றைக் கூட்டித் தள்ளும்போது ஒரு மாதிரி

வாசமடிக்கும்.

அந்த வாசனை உஷாவுக்கு மிகவும் பிடிக்கும்.

அதை அனுபவித்தபடியே சில்லென்ற டேங்க் தண்ணீரை வாசல் பக்கமாய் உள்ள பைப்பில் பிடிக்கும்போது, உச்சி மண்டை வரை ஒரு வெலவெலப்பு தட்டும். பின் அந்தத் தண்ணீரால் வாசல் தெளித்து முடித்து விட்டு, அரிசி மாவால் கோலம் போடும் ஒரு கலா ரசனை மிகுந்த வேலை ஆரம்பமாகும்.

முதலில் புள்ளிகள் வைத்தல்.. பிறகு அவற்றை வளைகோடுகளாலும் நேர்கோடுகளாலும் சிறைப்படுத்துதல்.. கிட்டத்தட்ட ஒரு ஓவியம் வரைகிற மாதிரியான செயல்தான் அது.

உஷா இவற்றில் எதிலும் குறை வைப்பதே கிடையாது.

இத்தனைக்கும் அவள் தங்கை நிஷா இருக்கிறாள். எட்டு மணிக்கு முன்னால் அவள் கண் திறந்து பார்த்ததாக வரலாறே கிடையாது.

உஷாவுக்கு இருபத்தி ஆறு வயதாகிறது என்றால் நிஷாவுக்கு இருபத்தி நான்காகிறது.

பாகம் பிரித்துக் கொண்டு எவ்வளவோ வேலைகளைச் செய்யலாம்தான். ஆனால் நிஷா எதற்காகவும் காலைத் தூக்கத்தை மட்டும் இழக்கத் தயாரில்லை என்று சொல்லவே சொல்லி விட்டாள்.

அப்படியே எழுந்தாலும் இந்த வாசல் தெளித்தல், கோலம் போடுதல், பால் காய்ச்சி காபி போடுதல், ஈஸி சேரில் சாய்ந்து கொண்டு பேப்பர் படிக்கும் ஆண் வர்க்கத்திடம் அதை ஏந்தி வந்து தருதல் என்பதெல்லாம் சரியான அடாவடியான ஆணாதிக்கம் மிகுந்த செயல் என்பது அவள் கருத்து.

உஷாவுக்கு இப்படியெல்லாம் சிந்திக்கவே தெரியாது. பெண் என்றால் அடக்க ஒடுக்கமாக வீட்டு வேலை பார்த்துக் கொண்டு அப்பா, அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு இருக்கவேண்டும் என நினைக்கும் ஜாதி.

அதனால்தான் அதிகாலையிலேயே உஷாவுக்கு அன்றைய தினம் ஆரம்பமாகிறது. நிஷாவுக்கோ எட்டு மணிக்குத் தொடங்கினால் அது குறைந்த பட்சம்.

ஒரு தலையணைக்கு இரண்டை அண்டக் கொடுத்துக் கொண்டு அவள் தூங்கும்போது பார்த்தால் சிரிப்பாய் வரும்.

மரவட்டை போல சுருண்டுதான் படுத்திருப்பாள். முகம் எங்கிருக்கிறது என்றே தெரியாது. சமயங்களில் காலை ஆறு ஏழு மணிவாக்கில் அவளுக்கு போன்கால்கள் வரும்.



ஆகஸ்ட் முதல் ஞாயிற்றுக்கிழமை உலக நண்பர்கள் தினம். தோள் கொடுக்கும் தோழமைக்கு பெருமை சேர்க்கும் வகையில் சில நட்பு மொழிகளை இந்த இதழில் தூவியிருக்கிறோம். அனைவருக்கும் நண்பர்கள் தின வாழ்த்துக்கள்!

**நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது கூட சுலபமே. ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் சிரமம்.**



பக்கத்திலேயே மொபைல் போன் இருக்கும்.

எடுத்துக் காதோரம் வைத்துக் கொண்டு, சுருண்ட நிலையில் இருந்து விலகாமல் மெல்ல அவள் பேசுவதைப் பார்த்தால், பேச்சு, தூக்கம் இரண்டையும் அவள் பேலன்ஸ் செய்வது நன்றாகத் தெரியும்.

அப்பா தியாகராஜன் தலையில் அடித்துக் கொள்வார். உஷா சிரிப்பாள்.

அந்த வீட்டில் அவர்கள் மூன்றே பேர்தான்.

தியாகராஜன் ஒரு ரிடயர்ட் பி.டி.ஓ.!

பென்ஷன் வருகிறது. தாயில்லாத அந்த இரண்டு பெண்களையும், எப்படியோ தான் வேலை பார்த்த நாளில் நல்லவிதமாகப் படிக்க வைத்து விட்டார் தியாகராஜன்.

படிக்க வைக்கும்போது கூட, இருவராலும் வித்தியாசமான பிரச்னைதான்.

ராகிங்குக்கு பயந்து கொண்டு உஷா சில நாட்கள் காலேஜுக்கே செல்லவில்லை.. நிஷாவோ வீட்டுக்கே வரவில்லை. அவளைத் தேடிக் கொண்டுதான் சிலர் வீட்டுக்கு வந்தனர்.

காலேஜில் அவள் பயங்கரமாக கலாட்டா செய்வதாகக் கூறி தியாகராஜனிடம் புகாரும் கூறினார்கள்.

தியாகராஜன் ஒரு ஓரமாய்ப் போய் உட்கார்ந்து விட்டார்.

'கடவுளே! என் வயிற்றில் எப்படி இப்படி எதிரும் புதிருமாக இரண்டு பேர் பிறந்தார்கள்?' என்று கேட்டுக் கொண்டு கண் கலங்கிப் போனார்.

உஷாதான் அப்பொழுது ஆறுதல் கூறினாள்.

"அழாதீங்கப்பா.. நீங்க அழுதா எனக்கும் அழுகை வரும்" என்று

மூக்கைச் சிந்தினாள்.

ஆனால் நிஷாவோ, "ஒரு ஆண் பிள்ளை போய் அழலாமா?" என்றுதான் திருப்பிக் கேட்டாள்.

"என்ன பண்றது.. நீ ஒரு பொம்பள ரவுடியா போய்ட்டியே.."

"தைரியமா இருந்தா ரவுடியா?"

"எது தைரியம்..? திமிரு, தெனாவெட்டுக்குப் பேர் தைரியமா?"

"இருக்கலாம். திமிரும் தெனாவெட்டும்தான் தைரியம்னா அப்படியே வெச்சுக்குங்க. ஆனா ஒண்ணு.. எந்த ஆம்பளையும் என்கிட்ட பல் இளிக்கவோ ஜொள்ளு விடவோ முடியாது. மீறி வழிஞ்சாங்கன்னா செருப்பு பிஞ்சிடும்.."

அவள் இப்படிச் சொல்லும்போதே அனல் அடிக்கும். தியாகராஜனும் ஒரு வகையில் அதை ரசிப்பார். அந்த வகையில் தன் பெண் ஒரு அனல் புஷ்பம் என்பது அவர் கருத்து. இந்த அனல் புஷ்பத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

எவ்வளவோ விஷயங்கள் காதில் விழுகிறது.

தியாகராஜனே நிறைய பார்த்திருக்கிறார்.

அவருடைய சகா, பரமசிவத்தின் மகள்கள் இரண்டு பேர்.. வேலைக்குப் போன இடத்தில் காதலித்து ஓடிப் போய்க் கல்யாணம் செய்து கொண்டனர். பரமசிவம் மனம் ஒடிந்து போனார்.

அதே கதைதான் தாசில்தார் ஒருவர் குடும்பத்திலும் நடந்தது. அவ்வளவு எதற்கு..? பத்திரிகைகளைத் திறந்தால், ஓடிப் போய் அவஸ்தைப்படும் பெண்களைப் பற்றித்தானே கதை கதையாக வருகிறது.

அதை எல்லாம் படிக்கும்போது தியாகராஜனுக்கு மனசு துடிக்கும். தாயில்லாத பெண்களை எப்படி வளர்த்து ஆளாக்கப் போகிறோமோ



**மனைவி:** என்னங்க.. 'உனக்காக உயிரையே விடுவேன்'னு முன்னெல்லாம் அடிக்கடி சொல்வீங்களே..

**விவேக்:** அதுக்குக்கூட அலவ் பண்ணாம நீயே எடுத்துட்டு இருக்கியே!

- காசிதாசன், வந்தவாசி.



என்று ஒரே தவிப்பாக இருக்கும். அதிலும் உஷாவை நினைத்தால் மிகவும் பயமாக இருக்கும்.

ஒரு கரப்பான் பூச்சி மேலே விழுந்ததற்கே நான்கு நாள் காய்ச்சலில் படுத்தவள் அவள்! அந்த அளவு பயம் ஒரு பக்கம் என்றால், அதற்கு மேல் இரக்கமுள்ள மனசு மறு பக்கத்தில்.. பல பிச்சைக்காரர்கள் எந்த வீட்டில் எது இல்லாவிட்டாலும் உஷா எதையாவது போட்டே தீருவாள் என்றே முடிவு செய்து வந்து போவதுண்டு.

அவர்களை நிஷா பார்த்து விட்டாலோ.. வந்தது ஆபத்து!

"டேய் போங்கடா.. போய் உழைச்சுப் பொழைக்கற வழியப் பாருங்க. பிச்சை எடுக்க உங்களுக்கு வெக்கமா இல்லை.." என்று ஆரம்பித்து விடுவாள்.

இதனால் உஷாவுக்கும் நிஷாவுக்குமே கூட அடிக்கடி கருத்து வேறுபாடு ஏற்பட்டு அது சண்டை வரை செல்லும். இறுதியில் நிஷாவுக்கு ஈடு கொடுக்க முடியாமல் உஷா மடங்கிப் போய் விடுவாள்.

அப்போதெல்லாம் தியாகராஜன் குறுக்கிட்டு "கவலைப்படாதம்மா.. அவ ஒரு காட்டுக் குதிரை. அந்தக் குதிரையை அடக்க ஒருவன் வருவான். இவளை நம்மால எல்லாம் அடக்க முடியாது. நல்ல கொடுமைக்காரனா ஒருத்தன் வரணும். அப்பதான் இவ கொட்டம் அடங்கும்" என்பார்.

ஒரு அப்பாவா இப்படிச் சொல்வது?

உஷா மறித்து வாயைப் பொத்துவாள்.

அப்படிப்பட்ட உஷாவுக்கு இன்று ஒரு முக்கியமான நாள்.

அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வர இருக்கிறார். அதில்கூட நிஷா ஒரு குட்டி கலாட்டா செய்து விட்டாள்.

'மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தால் ஒழுங்கு மரியாதையா நடந்து கொள்ள வேண்டும்; ஆடத் தெரியுமா, பாடத் தெரியுமா என்று கேட்டு உஷாவை படுத்தக் கூடாது.

அதேபோல அவர்களுக்கு 'சொஜ்ஜி பஜ்ஜி' என்று தியாகராஜனும் எந்த உபசாரங்களும் செய்யக் கூடாது. வந்த மரியாதைக்கு ஒரு காபி கொடுக்கலாம். அவ்வளவுதான். கல்யாணம் என்பது உறவுப் பரிமாற்றம். அதை அந்தஸ்து, பணம் போன்றவற்றால் எடை போட முயல்வது மிகப் பெரிய தப்பு' என்று ஒரு பெரிய பிரசாரமே பண்ணி விட்டாள்.

தியாகராஜன் காதைப் பொத்திக் கொண்டார்.

"இப்படி காதைப் பொத்திக்கிட்டால்லாம் விட மாட்டேன்.. இந்தக் காலத்து ஆம்பளைங்களப் பத்தித் தெரியும்தானே? அசந்தா காதுல பூ சுத்திடுவாங்க. மண்ணெண்ணெய் கண்டுபிடிச்சது அடுப்பு

எரிக்கறதுக்காக இல்லப்பா. உஷா மாதிரி வாயில்லாப் பூச்சிகளைக் கொளுத்த" என்று திருப்பிக் கத்தினாள்.

தியாகராஜனுக்கு அவளைச் சமாளிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

நல்லவேளை! நிஷா என்னும் அந்தப் பிசாசு இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை.

உறக்கம் கலைந்து எழுந்த நிலையில் முகம் கழுவிக் கொண்டு வந்த தியாகராஜன் பெட்ரூமை ஒட்டி ஒரு பார்வை பார்த்தார்.

பிறகு உஷாவிடம் வந்தார்.

அவள் சமையல்கட்டில் காபி போட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மாடி.."

"இருங்கப்பா.. ரெண்டு நிமிஷத்துல காபி ரெடியாயிடும்."

"அதுக்கில்லம்மா.. உனக்கு மளிகைக் கடைல எதாவது வாங்கணுமா?"

"எல்லாம் இருக்குப்பா.."

"பஜ்ஜி போட வாழக்கா உருளைக்கிழங்கு இருக்குதானே?"

"எல்லாம் தயரா இருக்கு."

"அது சரி.. உன் அத்தை பத்து மணிக்கு வந்துடுவா. அவகிட்ட நீ அடுப்படிய விட்டுடு. நீ உக்காந்து இதை எல்லாம் செய்துக்கிட்டு இருக்காதே."

"சரிப்பா.. ஆமா.. மாப்ளை வீட்ல எத்தனை மணிக்குப்பா வராங்க..?"

"டாண்ணு 11 மணிக்கு வந்துட்றதா சொல்லியிருக்காங்க.."

"இந்த நிஷாப் பிசாசை எப்படிப்பா சமாளிக்கப் போறிங்க?"

"நீ கவலையே படாதே. அவ கேட்டா சாயங்காலம் வரப் போறதா சொல். அவளும் பகல்ல லைப்ரரி, அங்க இங்கனு போய்டுவா. நமக்கும் பிரச்னை இருக்காது."

"ஒருவேளை போகலைன்னா..?"

"விடு.. அப்பப் பார்த்துக்கலாம்."


"பயமா இருக்குப்பா.. அவங்க எதிரே இவ அதிகப் பிரசங்கித்தனமா ஏதாவது பேசி வெச்சா..?"

"எனக்கும் பயமாத்தான் இருக்கு."

"பெரிய இடம்னு சொல்றிங்க. ஏடாகூடமா ஏதாவது நடந்துட்டா.."

"விடு.. ரொம்பத் துள்ளினா ஒரே அறை.. இதுவரை என் கை நீண்டதில்லை. இன்னிக்கு அவ அறை வாங்கணும்னு இருந்தா யாரால





மாத்த முடியும்?"

"ஆனா ஒண்ணு.. இந்த இடம் ரொம்ப நல்ல இடம். மாப்ளை அமெரிக்காவுல இருக்கான். காசு பணமெல்லாம் பெரிசு இல்ல.. ஒழுக்கம், குடும்பப் பாங்கு இதுதான் முக்கியம்ங்கறதால நம்மளைப் பத்தி கேள்விப்பட்டு பார்க்க வராங்க. பையனுக்கு மட்டும் உன்னைப் பிடிச்சுட்டா நீ எங்கயோ போயிடுவே..!"

"எங்க.. ஜிஎச்ல பார்ச்சவரிக்கா?"

எதிர்பாராத ஒரு கேள்வி அவர்கள் இடையே வந்து விழுந்தது. வாயில் பிரஷ்ஷுடன் நிஷா நின்று கொண்டிருந்தாள். அவள்தான் அப்படிக் கேட்டவள்.

தியாகராஜனுக்குக் குட்டுப்பட்டது போல் இருந்தது.

"வாயைக் கழுவு.. உனக்கு எதையும் சரியாவே யோசிக்க வராதா?" அலறினார்.

"இன்னிக்கு இப்படியெல்லாம் யோசிச்சாதான் நாம தப்பிக்க முடியும். தெரிஞ்சுக்குங்க.."

"போச்சுடா. காலம் காத்தாலையே ஆரம்பிச்சுட்டா. ஆமா.. பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டு இருந்தியா?"

"இல்லையா பின்னே.. எனக்கு பேர் நிஷாதான். நிஷாப் பிசாசு கிடையாது. அப்புறம் என்ன சொன்னீங்க? ஆங்.. காலைல நான் லைப்ரரி அங்க இங்கனு போயிடுவேனா? மாப்ளை வீட்டுக்காரங்க 11 மணிக்கு வரப்போறாங்களா.. வரட்டும்.. வரட்டும்.."

நிஷா சொல்லும்போதே நெருப்பு கனன்று சிவக்கிற மாதிரி இருந்தது. தியாகராஜன் வெளியேறிப் போனார்.

## ◀◀ 2 ▶▶

'ஒருவர் எவ்வளவு மனோபலம் உடையவராக இருந்தாலும் சரி.. அவரைத் தொடர்ந்து ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தால் அவர் சலனமடைவார். ஏன் இப்படிப் பார்க்கிறார் என்று கேட்கப் போய் 'சும்மாதான்' என்று அவர்கள் கூறினாலும் அதைக் கேட்டு மனது சமாதானம் அடையாது. இப்படி ஒரு பதிலைச் சொன்ன பிறகு மீண்டும் பார்த்தால், பார்க்கப்படுபவர்க்கு மிகப் பெரிய அளவில் மனதில் அச்சமும், குழப்பமும் ஏற்படும்..

அதன் பின் அவர்களை சாதாரணமாக யாராவது பார்த்தால் கூட அவர்கள், ஏதோ ஒரு கெட்ட நோக்கத்தோடுதான் சம்பந்தப்பட்டவர் பார்க்கிறார் என்று நினைப்பார்கள்.






பார்வைக்கு அப்படி ஒரு சக்தி உண்டு.

ஹாலந்தில் ஒரு வக்கீலை இப்படிப் பார்த்துப் பார்த்தே பைத்தியமாக்கி விட்ட சம்பவம் ஒன்று உண்டு.

அவர் ஒரு பிரபலமான கிரிமினல் லாயர். வழக்கு ஒன்றில் அவரால் பாதிக்கப்பட்ட எதிரிகளில் சிலர்தான் இப்படி நடந்து கொண்டனர். ஒருவருக்கு நான்கு பேர் அவரைக் கண்காணித்தனர். வக்கீலும் தனக்குள் சமாதானங்களைச் செய்து கொண்டு அவர்கள் பார்வையைத் தவிர்க்கப் பார்த்தார். ஆனால் அவர்கள் விடவில்லை.

இறுதியில் மனம் வெறுத்து அவர் கத்திக் கூப்பாடு போட்டு பைத்தியமாகவே ஆகிவிட்டார்.

இரு கண்களால் கூர்மையாகப் பார்ப்பது என்பது சாதாரண விஷயமல்ல!'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

ஒன்பது மணி!

அந்த நாளைய பெல்ஜியம் கெடிகாரம் சப்தம் போட்டு ஊரைக் கூட்டியது.

வெங்கடேச சுப்ரபாதம் சன்னமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. கூடவே, வீடு முழுக்க ஒரு மெல்லிய மேகப் பொதி போல சாம்பிராணி தூபம்!

உஷாதான் ஈரத் தலையோடும், பட்டுப் புடவை சரசரக்கவும் போட்டுக் கொண்டே போனாள்.

நிஷா உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கையில் பீங்கான் கோப்பையில் டீ ஆறி விட்டிருந்தது. இருந்தும் அதைப் பாயசமாய்க் கருதி சூப்பிக் கொண்டிருந்தாள். இடையிட்டது ஆட்டோ சப்தம்.

நிமிர்ந்து பார்த்தபோது அத்தை கனகம் இறங்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்க்கவும் நிஷாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. கனகம்

பார்ப்பதற்கு கட்டை குட்டையாக இருப்பாள்.

சாதாரணமாக நடக்கவே வராது. 'குடுகுடு'வென்றுதான் ஓடுவாள். கேட்டால் அதுதான் தன் நடை என்பாள்.

எப்பொழுதும் கையில் ஒரு துணிப் பை இருக்கும். நெற்றியில் விபூதி, குங்குமம், செந்தூரம், மஞ்சள்.. போதாததற்கு ஏதாவது ஹோமத்து மை என்று எல்லாமே இருக்கும்.

அதனால் பார்க்கும்போதே சிரிப்பு வந்து விடும்.

அத்தை புருஷன் ஒரு குடிகாரன். குழந்தைகள் இல்லை. அத்தைதான் கல்யாண வீடுகளில் சமையலுக்குச் சென்று சம்பாதிப்பவள். அதைக் குடித்தே அழிப்பவன்தான் அவள் கணவன். ஆனால் அவன் திருந்தி விடுவான், தன்னை வாழ வைப்பான் என்று நம்பி கோயில் கோயிலாகப் போய்க் கொண்டிருப்பதுதான் அத்தையின் நிகழ் கால நடவடிக்கை.

நிஷாவுக்குக் கோபம் கோபமாக வரும்.

"வா அத்தை.. எங்க காணோமேனு பார்த்தேன்" என்று உள்ளே நுழைபவளை ஒரு மாதிரி வரவேற்றாள். கனகத்துக்கும் அவள் சுபாவம் தெரியும். ஒரு முறை மட்டும் முறைத்தாள். முறைத்தபடியே உள்ளே சென்றாள். உஷா ஒரு தேவதை போல கண்ணில் பட்டாள். அத்தையைப் பார்க்கவும் ஓடி வந்து காலில் விழுந்து எழுந்தாள். "நல்லாரு.. நல்லாரு.. இப்பதான் அந்தப் பிசாசைப் பாத்தேன். வாயப் புடுங்கப் பாத்தா.. ஓடி வந்துட்டேன். இருந்தா உன்னைப் போல இருக்கணும்" என்று பொங்கி வழிந்தாள். தியாகராஜனும் எதிர்ப்பட்டார்.

"வா கனகம்!"

"வந்துட்டேன் தியாகு. நீ சொன்ன மாதிரியே ஒன்பது மணிக்கெல்லாம் வந்துட்டேன்."

"சந்தோஷம்க்கா.. எப்படி இருக்கார் மாப்ளே?"

"இப்பல்லாம் வெளிய போய்க் குடிக்கறது இல்லை. நானே வீட்ல ஊத்திக் கொடுத்து படுக்க வெச்சுட்றேன். ரசாபாசமில்லாம ஏதோ நாள் ஓடிக்கிட்டு இருக்கு.."

"ஹூம்.. இதை ஒரு முன்னேற்றமா நினைக்கற அளவு ஆயிடிச்சே உன் நிலைமை."

"என்னப்பா பண்ண..? எல்லாம் என் தலை எழுத்து. ஆனா எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆஞ்சனேயர் கோயிலுக்கு இன்னியோட நூத்தி மூணு நாள் போய்ட்டேன். இன்னும் அஞ்சு நாள் போய்ட்டா நூத்தி எட்டு நாள் ஆயிடும். அவர் கண் திறக்காமலா போய்டுவார்.."

கனகம் நம்பிக்கை காட்டினாள். நெற்றியில் ஆஞ்சனேயர் கோயில்



செந்தூரம். தியாகராஜன் அதைக் கேட்டுச் சிரித்தார்.




"அத்தை காரு.. ஆஞ்சனேயர்கிட்ட போனாலும் உன் புருஷன் திருந்த மாட்டார். என்கிட்ட விடு. நெஞ்சுல நாலு மிதி. ஒரு மணி நேரத்துல வழிக்குக் கொண்டு வரேன்" என்றபடியே நிஷா வந்தாள்.

"தியாகு.. இவளை வெச்சுகிட்டா இன்னிக்கு பெண்ணு பாக்கப் போறாங்க..?"

அத்தை கனகம் தியாகராஜ னிடம் கேட்டாள்.

"ஆமாங்கா.. எதையாவது சொல்லி அனுப்பிடலாம்னு பாத்தேன். முடியல."

"அப்ப இன்னிக்கு உஷாவுக்கு மாப்பிள்ளை பார்த்த மாதிரிதான்.."

"ஏன்.. ஏன்.. நான் என்ன வரப் போற மாப்ளையைக் கடிச்சா தின்னுடப் போறேன்."

"ஆளைக் கடிச்சாதானா.. வார்த்தையாலதான் எட்டு ஊருக்குக் கடிப்பியே."

"கடிக்கற மாதிரி இருந்தா கடிக்கத்தானே வேணும்."

"போதும்மா.. வார்த்தைக்கு வார்த்தை பேசி என்னை டென்ஷன் படுத்தாதே. வரப் போற மாப்ளை அமெரிக்கால வேலைல இருக்கறவர். நல்ல படிப்பு, சம்பளம்.. ஏதாவது சில பலவீனங்கள் இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போறதுதான் புத்திசாலித்தனம்.

உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். வர்றவங்க போறவரைக்கும் நீ யார் கண்ணுலயும் படக் கூடாது. என்ன நடந்தாலும் சரி.. வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசக் கூடாது.."

"எம்ப்பா இப்படி போலீஸ் கமிஷனர் மாதிரி 144 போட்றீங்க? எனக்கு உஷா வாழ்க்கைல அக்கறை இல்லைன்னு நினைக்கறீங்களா?"

"இதோ பார்.. எதையாவது தொணதொணனு பேசி கேள்வி கேட்டு என் டென்ஷனை அதிகரிக்காதே. இப்ப சொல்றேன். பெண் பார்க்க வர்றவங்க போறவரைக்கும் வாயை வெச்சுக்கிட்டு சும்மா இருக்கணும். மூச்சு விடக் கூடாது. உன் ரூமை விட்டு வெளியேயும் வரக் கூடாது."

தியாகராஜன் ஒரே போடாகப் போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்கக் கிளம்பிப் போனார். கனகமும் 'அப்படிப் போடு' என்றபடி சமையல்கட்டில் போய்ப் புகுந்து கொண்டாள்.

உஷா பூஜையறையில் சாமியிடம் தஞ்சம் புகுந்திருந்தாள்.

"சாமி.. எனக்கு இந்த இடம் நல்லவிதமா முடிஞ்சுடணும்" அவளுக்குள் பிரார்த்தனை.

நிஷாவுக்கு எரிச்சலாக வந்தது.

போய் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்!

சரியாக மணி பன்னிரண்டு.

வீட்டு வாசலில் சர்சரென்று கார்கள் வந்து தேங்கி நின்றன. கோட்டும் சூட்டுமாய் கதவைத் திறந்து கொண்டு மாப்பிள்ளை ராஜேஷும் இறங்கினான். கூடவே ஒரு படை.

நல்லி சில்க்கையும், தங்க மாளிகையையும் அப்படியே விலைக்கு வாங்கி, வாங்கியதை உடம்பில் தாங்கியபடி வருவது போல் இருந்தது.

தியாகராஜன் பிரமிப்போடு கைகளைக் கூப்பியிருந்தார். அப்படியே திரும்பி நிஷா இருக்கும் அறையைப் பார்த்தார். அறைக் கதவு மட்டுமல்ல, ஜன்னல் கூட பூட்டப்பட்டிருந்தது.

நிம்மதியாக இருந்தது.

எல்லோரும் உள்ளே வந்தனர். தியாகராஜனின் நண்பர்கள் சிலர் மனைவிமார்களுடன் வந்திருந்தனர். அவர்கள் சமையல்கட்டுக்கு ஓடி காபியைக் கொண்டு வந்து கொடுத்து, முதல் கட்ட உபசரிப்பை ஒரு மாதிரி செய்து முடித்தனர்.

மாப்பிள்ளை பரங்கிப் பழம்போல நல்ல சிகப்பு.

கூலிங் கிளாஸ் தரித்திருந்தான். கழுத்தில் மைனர் செயின்.



**விவேக்:** வலது கை மணிக்கட்டில வலி உயிர் போகுது டாக்டர்!

**டாக்டர்:** வயசாயிடுச்சுல்ல.. அப்படித்தான் இருக்கும்!

**விவேக்:** இடது கைக்கும் அதே வயசுதானே டாக்டர்! அது வலிக்கலையே!

- ப.ராமகிருஷ்ணன், கயக்காடு.



கையில் பிரேஸ்லெட்.. கோட் பாக்கெட்டில் துருத்தலைப் அவர் இதுவரை பார்த்திராத ஸ்டைலில் செல்ஃபோன். அதைக் கையில் எடுக்காமலே பேசத் தோதாக ஹியரிங் ஸ்பீக்கர் ஒன்று காது மடலுக்குள் அமர முடிந்த ஸ்டைலில்! பார்க்கும் இடமெல்லாம் அமெரிக்க மணம்!

உடன் வந்தவர்கள் அதிகம் பேசவில்லை. ஆனால் அடிக்கடி உடுப்பைச் சரிசெய்து கொள்வது, நகைகளைத் தளர்த்தி விட்டுக் கொள்வது என்று அலட்டிக் கொண்டனர். அவர்களோடு வந்திருந்த ராமமூர்த்தி என்பவர்தான் வாயைத் திறந்தார். அவர்தான் அந்த இடத்தை தியாகராஜனுக்குக் காட்டியவர்.

"அப்புறம் தியாகராஜன்.. அப்படி உக்காருங்க. ஏன் நின்னுக்கிட்டே இருக்கீங்க?"

"இருக்கட்டும் ராமமூர்த்தி. ஆமா.. சுலபமா வீடு கண்டுபிடிச்சு வந்துட்டீங்களா.. ஒண்ணும் சிரமம் இல்லையே..?"

"நான்தான் வந்துருக்கேனே.. என்ன சிரமம்?"

"இல்ல கேட்டேன்.. மந்தடி ஜாதகப் பொருத்தம் பார்த்தேன். ரொம்பப் பிரமாதமா பொருந்தி இருக்குது."

"நீங்க பாத்துக்குங்க. ஆனா தம்பி ராஜேஷுக்கு அதுல எல்லாம் நம்பிக்கை கிடையாது.."

ராமமூர்த்தி சகஜமாகப் பேச, மாப்பிள்ளை ராஜேஷ் தன் கூலிங் கிளாஸ் கண்களால் தியாகராஜனின் வீட்டை ஒருமுறை அளந்தான்.

அந்தக் காலத்து சாதாரண வீடு.

சுவர்களில் நிறைய காலண்டர்கள், புகைப்படங்கள், அங்கங்கே சின்னச் சின்னதாய் ஓவியங்கள், நிஷா வரைந்தது. அதைப் புரிந்து கொள்ள பிரம்மா இன்னொரு மூளையைப் படைத்திருந்தால் தேவலை. ஆனால் இருக்கும் மூளையை வைத்துக் கொண்டு அதைப் பார்த்தால் வர்ணங்களைக் கொட்டிக் கலந்து உருண்டை பிசைந்த மாதிரி இருக்கும். ஒன்றுமே புரியாது. ராஜேஷும் அதைப் பார்த்தான். அருகே சென்று பார்க்க ஆசைப்பட்டவன் போல எழுந்து அருகே சென்றான். உற்றுப் பார்த்தான். "பியூட்டிஃபுல்" என்றான். தியாகராஜனே அதைக் கேட்டு அதிர்ந்தார்.

"யார் இதை வரைஞ்சது?" கேட்டான் அவன்.

"அது.. அது.. என் செகண்ட் டாட்டர் வரைஞ்சா."

"ஐ.சீ.. எங்க அவங்க?"

"அவ.. அவ.. அவ இப்ப இல்லை. ஐ மீன் அவளுக்கு வைரஸ் ஃபீவர். அதனால.."

தியாகராஜன் சமாளிக்கப் பார்த்தார்.

"இட்ஸ் ஓ.கே.. இந்த அளவு ஐடியலாஜிகலா ஒரு படத்தை நான் நியூயார்க் ஆர்ட் கேலரிலதான் பாத்துருக்கேன்.. வாட் எ பியூட்டிஃபுல் பெர்ஃபாமன்ஸ்!"

"இதுவா?"

"ஆஃப்கோர்ஸ். முதல்ல நான் அவங்களப் பாக்கணும். கொஞ்சம் கூப்பிட்றீங்களா?"

"தாராளமா.. அதுக்கு முன்னால் நல்ல நேரம் போறதுக்குள்ள பொண்ணப் பாத்துடலாமே.."

"எனக்கு எல்லா நேரமும் நல்ல நேரம்தான். சரி உங்க இஷ்டப்படியே வரச் சொல்லுங்க.."

ராஜேஷ் பதிலோடு தோளைக் குலுக்கிக் கொண்டு போய் அமர்ந்தான்.

அடுத்த இரண்டாவது நிமிடம். ஒரு பட்டுத் தேராக உஷா அவன் எதிரில் அழைத்து வரப்பட்டாள்.

அகலக் கரை போட்ட பட்டுச் சேலை.. தலை கொள்ளாத அளவு பூ! மேக்கப் பாரத்தில் அவள் தலை தாழ்ந்திருந்தது.

ராஜேஷ் அவளைப் பார்த்த நொடி அதிர்ச்சியடைந்தவன் போல ராமமூர்த்தியைப் பார்த்தான்.

"என்ன தம்பி?"

"என்ன சார் இது.. எதுக்கு இவ்வளவு மேக்கப்? சாதாரணமா ஹோம்லியா இருந்தா போதும்னுதானே நான் சொல்லியிருந்தேன்."

"அது.. அது.. இதுதான் தம்பி எப்பவும் வழக்கம்."

"ஐ'ம் சாரி.. எல்லாம் ரொம்ப இடியாடிக் கல்ச்சர். பொம்பளைங்கள ஏன் இப்படி அலங்காரப் பதுமையாக்கி எக்ஸிபிட் பண்றீங்க? எனக்கு கேஷுவலா இருக்கணும். ரொம்ப சாதாரணமா இருக்கணும். அப்பதான் பிடிக்கும்."

"இதோ.. இப்பவே வேணும்னா கேஷுவலா ஒரு நைட்டில கூட வரச் சொல்றேன். போதுமா?"

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதீங்க. நான் சொன்னதை நீங்க சரியாப் புரிஞ்சுக்காம இவங்களை அப்ரோச் பண்ணியிருக்கீங்க.. இவங்களும் இன்னும் அந்தக் காலத்துலயே இருக்காங்க. இவங்க மைண்ட் செட்-அப் ரொம்ப புவர்.

நீங்க சொல்ற மாதிரி எல்லாம் கேட்டு ஆடினா என்ன அர்த்தம்..? எனக்குப் பிடிச்சிருக்கு பிடிக்கலைங்கறதா விஷயம்..? ஒரு பொண்ணு ஃப்ரீ மைண்டோட இருக்கணும். சாரி.. நீங்க என்னை ரொம்ப



தர்மசங்கடப்படுத்திட்டீங்க.."

ராஜேஷ் படு முற்போக்காகப் பேசினான்.




அவன் பேச்சு உஷாவைக் கலக்கி இருந்தது. கண்களில் கண்ணீர் திரண்டு விட்டது.

உடம்பிலும் நடுக்கம் பரவ ஆரம்பித்து விட்டது.

"ஓ.. ஏன் அழறீங்க? நான் உங்கள எதுவும் சொல்லலை. என் கொள்கையைச் சொன்னேன். நீங்க தப்பா புரிஞ்சுகிட்டு அழாதீங்க. ஐ'ம் சாரி.."

"இல்ல.. நான் வேணும்னா சாதாரணப் புடவையில வரவா?"

"நோ.. எனக்காக இப்படி நீங்க உடனே உங்களை மாத்திக்கக் கூடாது. உங்ககிட்ட நான் சில விஷயங்கள் எதிர்பார்க்கற மாதிரி என்கிட்டேயும் நீங்க எதிர்பார்க்கணும். நாம ரெண்டு பேரும் சமம். நம்மோட அலைவரிசை.. தட் மீன்ஸ் ஃப்ரீக்வன்சி ஒத்துப் போகணும். இல்லாட்டி லைஃப் பார்ட்னர் ஆகுறது ஆபத்து.."

அவன் சொல்லச் சொல்ல உஷா ஒன்றும் புரியாத மாதிரிதான் வெறித்தாள். ஆனால் பதிலுக்கு "சபாஷ்.. வொண்டர்ஃபுல்" என்கிற கைத்தட்டல் பின்னால் இருந்து கேட்டது. திரும்பினால் நிஷா!

"வெல்செட் மிஸ்டர் ராஜேஷ்! ஐ அப்ரிஷியேட் யுவர் பாலிசி. ஆரம்பத்துல இருந்தே பாத்தேன். நீங்க யூஷுவல் ராமசாமி குப்புசாமி இல்ல.. எங்க ஊர் ரமேஷ் சுரேஷும் இல்ல. நிச்சயமா வித்தியாசமான ஆள். உங்களுக்கு நியூட்ரல் மைண்ட்."

அவளே பாராட்டிப் பெருகி வழிந்தாள்.

"நீங்க?"

"ஐ'ம் நிஷா. இந்த உஷாவுக்கு ஜஸ்ட் 526 டேஸ் பின்னால பொறந்த இவளோட இடியட் சிஸ்டர்"

"இடியட் சிஸ்டர்?"

"அப்படித்தான் இவங்க என்னைச் சொல்வாங்க."

"அந்த ட்ராயிங்லாம்?"

"அது நான் வரைஞ்சதுதான்.."

"பியூட்டிஃபுல், உங்களுக்குள்ள கபில் கிராஸ்ல இருந்து தாமரை வரை எல்லாரும் இருக்காங்க. வொண்டர்ஃபுல்."

"தேங்க்யூ.. இவங்கல்லாம் இதைப் பார்த்து பெயிண்ட் கொட்டிச்சானுதான் கேட்டாங்க. நீங்கதான் அதுக்குள்ற இருக்கற ஐடியாவைப் பாத்துருக்கீங்க.."

நிஷா சிரித்தபடி சொன்னாள். ராமமூர்த்திக்குப் புரிந்து விட்டது. 'ராஜேஷ் நிஷாவைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்லப் போகிறான். பிள்ளையார் பிடிக்க குரங்காகி விட்டதே.. என்ன செய்வது?' அவர்கள் பேசிக் கொண்டே போக ராமமூர்த்தி தியாகராஜனைத் தனியே அழைத்தார்.

"என்னங்க?"

"என்ன தியாகராஜன்.. கதையே மாறும் போல இருக்குதே.."

"புரியுது.. மாப்ளை நிஷாவைத்தான் பிடிச்சிருக்குன்னு சொல்லப் போறாரு.. அப்படித்தானே?"

"புரிஞ்சுகிட்டீங்களே.."

"அதுவும் ஒரு வகைல நல்லதுக்குத்தான். உஷாவுக்கு நான் வேற இடம் பாத்துக்கறேன். நிஷாவுக்கும் அவரைப் பிடிச்சிருந்தா முடிச்சுடலாம்."

"நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"வேற என்ன பண்ணச் சொல்றீங்க..? மனப் பொருத்தம்ங்கறது ரொம்ப முக்கியமான ஒண்ணாச்சே?"

ராமமூர்த்தியும் தியாகராஜனும் படு வேகமாக ஒரு முடிவுக்கு வந்தனர். மாப்பிள்ளை ராஜேஷ், 'நிஷாவைத்தான் பிடித்திருக்கிறது' என்று சொல்ல வேண்டியதுதான் பாக்கி. அப்படிச் சொன்ன மறு விநாடியே 'அதற்கென்ன.. அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட வேண்டியதுதான்..

தியாகராஜன் தயாரானார். உஷாவைப் பார்த்தார்.

அவள் குழம்பிப் போயிருந்தாள். வெட்கப்பட்டுக் கொண்டு நிற்கவும் பிடிக்கவில்லை.. விலகிச் செல்லவும் முடியவில்லை. பரீட்சை ரிசல்ட்டுக்குக் காத்திருக்கும் மாணவி போல அவளுக்குள் ஒரே தவிப்பு.

தியாகராஜன் அவளை உள்ளே போகச் சொல்லி விட்டு ராஜேஷ் பக்கம் திரும்பினார்.

அவன், "ஐ'ம் ஸாரி.. உங்களை எல்லாம் கொஞ்சம் டென்ஷனாக்கிட்டேன்னு நினைக்கிறேன்.." என்று சற்று தொண்டையைக் கனைத்தபடி செருமினான். அந்தச் செருமலே அவன் எதையோ சொல்லத் தயங்குவதை அவர்களுக்கு உணர்த்தியது.

ஆனால் அவர்கள்தான் ஏற்கெனவே கணக்கு பண்ணி






விட்டார்களே..

"என்ன மிஸ்டர் ராஜேஷ்.. எதையோ சொல்லத் தயங்கற மாதிரி தெரியுதே.."

"ஆமாம். ஆனா எப்படிச் சொல்றதுன்னுதான் தெரியல.."

"பரவால்ல.. சும்மா சொல்லுங்க."

"கல்யாணம்ங்கறது வாழ்க்கைல ஒரே ஒரு தடவை நடக்கற விஷயம்."

"நான் இல்லேங்கலியே.."

"அதே சமயம் அதுதான் ஒரு மனுஷனுக்கு டர்னிங் பாயிண்ட்டும்கூட.."

"ஷ்யூர்.. ஷ்யூர்."

"ஆகையால.." ராஜேஷ் வெற்றிலை மாதிரி வார்த்தைகளை மெல்ல, நிஷா கூர்மையானாள். அதற்கு மேல் உஷா.

"உம் சொல்லுங்க.."

"எனக்கு உங்க இரண்டு பெண்கள்ல நிஷாவை ரொம்பப் பிடிச்சிருக்கு.."

அவன் முடிக்க, அவள் முகம் மத்தாப்பானது. ஆனால் உஷாவோ கலங்கிப் போய் விட்டிருந்தாள்.

தியாகராஜன் அடுத்த நொடி நிஷாவைத்தான் பார்த்தார். அவளிடம் உற்சாகமான மௌனம்.

அவருக்கும் புரிந்து விட்டது.

"ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் ராஜேஷ். மனசுல பட்டதைச் சொல்லிட்டீங்க. நீங்க சொன்ன மாதிரி கல்யாணம்ங்கறது மனசுக்குப் பிடிச்சவங்களோட ஒரே ஒருமுறை நடக்கற ஒரு திருப்புமுனையான சம்பவம். இந்த விஷயத்துல நிஷாவுக்கும் உங்களைப் பிடிச்சா எனக்கு ஆட்சேபணை இல்லை."

தியாகராஜன் சுற்றி வளைக்காமல் பாயிண்ட்டுக்கு வந்தார். நிஷாவும் வெட்கத்தோடு உள்ளே ஓடினாள். அவள் இப்படி வெட்கப்பட்டு தியாகராஜன் பார்த்ததேயில்லை.

கை தட்டி ரசித்துச் சிரித்தார்.

ஆனால் உஷாவின் கண்களிலோ கண்ணீரின் பிரவாகம்.

## 3

'மனத்தைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் புத்தபிட்சுக்கள். இவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்தி அளப்பரிய சாதனைகள் பல செய்யக் கூடியவர்கள்.

உடம்பின் சக்தி உண்ணும் உணவால் உருவாவது.

அதன் நிழலைப் போன்றதுதான் மனோ சக்தி என்பது இவர்கள் கருத்து.

உடம்பின் சக்தியைப் பொறுத்தே மனத்திலும் சக்தி இருக்கும். எனவே உடம்பை நலத்தோடும் பலத்தோடும் பேண வேண்டும் என்பார்கள்.

இதையே நமது முன்னோர்களும் 'ஆரோக்கியமே பெரிய செல்வம்' என்றனர்.

ஒருமுறை ஒரு புத்த பிட்சு காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தாராம். அப்பொழுது அவரை நோக்கி ஒரு வேடன் ஓடி வந்து விழுந்தான். வந்தவன் அவரைப் பார்த்து ஒரு புலி துரத்தி வருவதாகக் கூறி, தப்பித்துக் கொள்ளச் சொல்லி விட்டு, அருகில் உள்ள மரத்தின் மேல் ஏறிக் கொண்டான்.

அதே வேளையில் அந்தப் புலியும் துரத்திக் கொண்டு வந்தது. பிட்சுவைப் பார்த்து விட்டு, அவர் மேல் பாய்வதற்குத் தயாரானது. ஆனால் பிட்சு துளியும் அயரவில்லை. அந்தப் புலியை மிக சாந்தமான பார்வைதான் பார்த்தார். பாயத் தயாரான புலி மெல்ல மாறி, அவரிடம் ஒரு நாயினைப் போல அடங்கிச் சென்று நின்றது.

வேடன் விக்கித்துப் போனான். பிட்சு புலியை அனுப்பி விட்டுத் திரும்பவும், அவரிடம் வந்த வேடன் 'உங்களுக்கு வசியம் தெரியுமா?' என்று கேட்டான்.

பிட்சு சிரித்தார். அவன் கருத்தையும் மறுத்தார். 'பின் எப்படி கொடிய புலி உங்களுக்கு அடங்கியது?' என்று கேட்டான்.

'நான் அதன் நண்பன் என்கிற எண்ணத்தை அதற்கு ஏற்படுத்தினேன். அதனால் அது அடங்கியது' என்றார்.

'அது எப்படி முடியும்..? நீங்கள் அதை சாந்தமாகப் பார்க்க மட்டும்தானே செய்தீர்கள்?' என்று கேட்டான். 'பேசுவதை விட பார்ப்பதில் நிறைய செய்திகளைப் பரிமாறிக் கொள்ளலாம் வேடனே..' என்றார் பிட்சு.

'அப்படியானால் எங்கே.. என்னிடம் அப்படிப் பேசி எனக்குப் புரிய வையுங்கள்.. பார்ப்போம்' என்றான்.

'இப்பொழுது வேண்டாம். இன்னொரு நாள் வா. உன்னிடம் பேசாமல்



### அறிந்து கொள்வோம்!

வில்வ மரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ இலை, லட்சம் ஸ்வர்ண புஷ்பத்துக்குச் (காசுகள்) சமம். ஒரு வில்வ இலையை சிவனுக்கு அர்ச்சித்தால், மகா பாவங்கள் விலகி சகல ஷேமங்களும் உண்டாகும். மாதப் பிறப்பு, சோம வாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி நாட்களில் வில்வம் பறிக்கக் கூடாது.

பிரேமலதா மகாதேவன், பெரியகுளம்.

(சென்னை, குன்றத்தூர், தாட்சாயணி அம்மன் கோயில் அர்ச்சகர் குமார சிவாச்சாரியாரிடம் சேகரிக்கப் பட்டது)



பேசிப் புரிய வைக்கிறேன்' என்றார்.

'ஏன் இப்பொழுது தவிர்க்கிறீர்கள்?' என்று கேட்டான்.

'உன் மனம் இப்பொழுது பரபரப்பில் இருக்கிறது. மனம் சிறிதும் சலனமின்றி உறை பனி போல இருக்க வேண்டும். அப்படி இருந்தால் எது வேண்டுமானாலும் செய்யலாம்' என்றார் அவர். 'அது எப்படி?' என்று கேள்விகளை வளர்த்துக் கொண்டே போனான் அவன்.

அவர் சிரித்தபடி, 'அதோ பார்.. வானத்தில் ஒரு ரதம்' என்று மேகப் பொதி ஒன்றைக் காட்டினார். அவனும் பார்த்து விட்டுத் திரும்பியபோது, அந்த பிட்சு அங்கே இல்லை. அவர் அவனை அப்போது தவிர்த்து விட்டார்.'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

அழுது வடிந்தபடி அமர்ந்திருந்தாள் உஷா.

அத்தை கனகம் வந்தாள்.

"எதுக்குடி வருத்தப்பட்றே.. கல்யாணம்ங்கறது நம்ம கையலா இருக்கு. அது ஆண்டவன் போட்ற முடிச்சுடி" என்றாள்.

உஷா பதிலுக்கு முறைத்தாள்.

"முறைக்காதே.. ஒரு விஷயம் தெரிஞ்சுக்கோ. ஒருத்தன் பொண்டாட்டியை இன்னொருத்தன் கட்ட முடியாதுன்னு சொல்வாங்க.

அப்படின்னா அர்த்தம் என்ன தெரியுமா?"

இடைவெளி விட்டாள்.

"போ அத்தை.. நீ எதையாவது சொல்லாதே. நான் ஒரு அதிர்ஷ்டக்கட்டை..." என்றாள் பதிலுக்கு உஷா.

"அட பைத்தியமே.. ஒரு மாப்பிள்ளை வந்து உன்னை வேண்டாம்னுட்டதுக்காக நீ அதிர்ஷ்டக்கட்டை ஆயிடுவியாக்கும். பைத்தியம். அவள் தாண்டி அதிர்ஷ்டக்கட்டை. அந்த நிஷா ஒரு காட்டுக் குதிரை. அவளோட ஒருத்தன் குடும்பம் நடத்த முடியும்னு நினைக்கறே நீ?"

"அப்படி நினைக்காமதான் 'எனக்கேத்த ஜோடி இவ'னு அவளைக் கட்டிக்கறேன்னு சொன்னாராக்கும்?"

"அங்கதான் அந்த மாப்பிள்ளைத் தம்பி தப்பு பண்ணிட்டான். நீ பாரேன், அவன் என்ன பாடு படப் போறான்னு.."

கனகத்தின் சமாதானம் கொஞ்சம் போல வேலை செய்தது. உஷாவும் கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டு, அடுத்த வேலையைப் பார்க்கத் தொடங்கினாள். கனகம் நேராக தியாகராஜனிடம் போய் நின்றாள். அவர் வாயில் புறம் ஈஸி சேர் போட்டு, அதில் சாய்ந்திருந்தார்.

"என்னக்கா?"

"உன் பொண்ணை சமாதானப்படுத்தறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு. தெரியுமா?"

"என்ன பண்ணச் சொல்றே..? யாரா இருந்தாலும் வருத்தமாத்தானே இருக்கும்?"

"அதுக்காக..? சட்டுப்புட்டுனு அவளுக்கும் ஒரு வரனைப் பார்த்து ரெண்டு பேருக்கும் ஒரே நாள்ல கல்யாணத்த முடி."

"அமையணுமேக்கா.."

"ஏன் அமையாது? ஒரு பையன் இப்படி பண்ணிட்டதால வர்றவனெல்லாம் இப்படியே நடந்துப்பான்னு ஏன் நினைக்கறே..?"

"அப்ப உஷாவுக்கும் வேகமா மாப்ளை பாத்து ஒரே நாள்ல ரெண்டு கல்யாணம் பண்ணுங்கறே.. அப்படித்தானே?"

"அப்பத்தான் இவளுக்கும் மனசு சமாதானமாகும். இல்லன்னா பெரியவ இருக்க சின்னவ விலை போய்ட்டானா, இந்தப் பொண்ணுகிட்ட ஏதோ குறை இருக்குனு, நினைக்க ஆரம்பிச்சுடுவாங்க. அதுவே ஒரு மைனஸ் பாய்ண்ட் ஆகி, இவளுக்கு நீ கல்யாணமே பண்ண முடியாம கூடப் போகலாம்."

"ஓ.. அப்படிக்கூட ஒரு இடைஞ்சல் இருக்குல்ல..?"





"இடைஞ்சலையே பெரிய இடைஞ்சல் அதுதான்.."

கனகம் பற்ற வைத்தது தியாகராஜனுக்குள் நன்றாகவே பற்றிக் கொண்டது. கையில் இருந்த பேப்பரில் 'மணமகள் தேவை' பகுதியில் வேகமாக ஊடுருவ ஆரம்பித்தார்.

மதியம் மணி 12 இருக்கும்!

அந்த அபார்ட்மெண்ட்டின் 'சி' பிளாக்கில் குடி இருக்கும் நவநீதனும் அவர் மனைவி பார்வதியும் தியாகராஜனைப் பார்க்க வந்தார்.

"வாங்க.. வாங்க.." தியாகராஜனும் வரவேற்று அமர்த்தினார்.

"உங்களை எல்லாம் விட்டுத்தான் போகப் போறோமே.. அதான் சொல்லிட்டுப் போகத்தான் வந்தோம்.."

"என்னது.. குண்டத் தூக்கிப் போட்றீங்க?"

"குண்டாவது பாமாவது.. நான் பேங்க் உத்தியோகஸ்தன். பிரமோஷன் தந்து ஊர் ஊரா மாத்தறதுதானே எங்க உத்தியோக லட்சணம்."

"ஓ.. பிரமோஷன்ல போறீங்களாக்கும்?"

"ஆமாம்.. காட்பாடி பிராஞ்சுக்கு ட்ரான்ஸ்ஃபர்."

"எனக்குத் தெரியாது நவநீதன். நான் இப்பதான் கேள்விப்பட்றேன்."

"அதனால் என்ன.. பழகின வரைல தாயா பிள்ளையா நல்லா பழகிட்டோம். கவலைப்படாதீங்க. நிஷா கல்யாணத்துக்கு நிச்சயம் வந்துடுவோம்."

"அது சரி.. நீங்கல்லாம் இல்லாமலா?"

"அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்.."

"என்ன.. சொல்லுங்க.."

"வீட்டை நல்லபடியா யாருக்காவது வாடகைக்கு விடணும். பூட்டி



**பெண்:** என் குழந்தை நான் பாடினாத்தான் தூங்குவான்!

**விவேக்:** ஆமா! சில குழந்தைங்க பயமுறுத்தினாத்தான் தூங்குங்க!

- சி.விஜயாம்பாள், காட்டிகானப்பள்ளி.



வெச்சா அது வீட்டுக்கு நல்லது இல்லேம்பாங்க.."

"வாஸ்தவம்தானே.. ஏன் பூட்டி வைக்கறீங்க? வாடகைக்கு விட்டா வீடும் பாதுகாப்பா இருக்கும். மாசமானா பணமும் வரும்ல?"

"அதன்.. யாராவது ஒரு நல்ல பார்ட்டிக்கு நீங்களே வாடகைக்கு விட்ருங்களேன்."

"நானா?"

"நீங்களேதான்.. இருந்து பார்த்து வாடகைக்கு வைக்க எனக்கு லீவு கிடையாது. இங்க எங்களுக்கு நல்ல பழக்கம்னா நீங்கதானே?"

"சரி.. வாடகை எவ்வளவு?"

"எல்லாம் உங்க விருப்பம். கொஞ்சம் லேட்டானாலும் பரவால்ல. நல்ல நபர்களுக்கா விடுங்க. அது போதும்."

"அப்ப ஒண்ணு பண்றேன்."

"என்ன?"

"என் ரெண்டு பொண்ணுங்க கல்யாணம் முடியற வரை உங்க வீடு என் பொறுப்புல என்கிட்டயே இருக்கட்டும். கல்யாணத்துக்கு வர்றவங்க தங்க கொள்ள பயன்படட்டும். பிறகு நான் நல்ல ஆளா பாத்து வாடகைக்கு விட்டுட்றேன்."

"சந்தோஷமா செய்யுங்க. வெறும பூட்டி வைக்காம தினசரி யாராவது போய்ப் படுத்துகிட்டாக்கூட சந்தோஷம்."

"நானே போய்ப் படுத்துக்கறேன். இப்ப என்ன?"

"அப்புறம் ஒரு விஷயம்.."

"என்ன நவநீதன்?"

"உங்களுக்குத் தெரியாததில்ல.."

"எதைச் சொல்றீங்க?"

"எங்கப்பா விஷயம்தான்.."

நவநீதன் 'அப்பா விஷயம்தான்' என்று சொன்ன நிமிஷம் தியாகராஜன் முகத்தில் ஏகப்பட்ட மாறுதல்கள்!

நவநீதனின் அப்பா நடராஜ பிள்ளை, ஒரு யோகாசன வித்தைக்காரராக இருந்தவர்.

அந்த அபார்ட்மெண்ட்டில் பலருக்கு யோகாசனம் செய்வது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தவர். அவரும் விதம் விதமாக ஆசனங்கள் போடுவார். பார்க்கவே படு பிரமிப்பாக இருக்கும்.

ஒரு கட்டத்தில் காவி உடுத்தி சன்யாசம் வாங்கிக் கொண்டு, ஏலகிரி மலையில் உள்ள அவரது குருநாதர் ஆஸ்ரமத்துக்கே போய் விட்டார்.

அதன்பின் எப்பொழுதாவது நவநீதனையும் அவர் மனைவி

பார்வதியையும் பார்க்க வருவார்.

அப்பொழுது அந்த அபார்ட்மெண்ட்டே அவரைப் பார்த்து விட்டு காலில் விழுந்து வணங்கும்.

பிறகு ஒரு நாள், அவர் மகா சமாதி ஆக இருப்பதாகக் கூறி நவநீதனுக்குத் தகவல் வந்தது.

மகா சமாதி ஆவது என்றால், சமாதிக் குழியில் அமர்ந்த நிலையில் குறிப்பிட்ட சமயத்தில் பிராண மூச்சைத் தானாக நிறுத்திக் கொண்டு விடுவது.

நவநீதனும் பார்வதியும் அலறி அடித்துக் கொண்டு புறப்பட்டார்கள். ஆனால்.. அவர்கள் துரதிர்ஷ்டம்! அன்று எதற்கோ பந்த் நடைபெற்று ஊரே மயான அமைதியில் இருந்தது. ஒரு டாக்சிக்காரன் கூட வர மறுத்துவிட்டான். எப்படியோ ஒரு காரைப் பிடித்து ஏலகிரிக்குப் போனபோது நடராஜ பிள்ளை சமாதியாகி விட்டிருந்தார். சமாதியை சலவைக் கல்லால் மூடி, மேலே பிருந்தாவன மேடை ஒன்றும் கட்டி, அதில் ஒரு துளசி நாற்றையும் வைத்து விட்டார்கள்.

நவநீதனுக்கும் பார்வதிக்கும் பொசுக்கென்று ஆகி விட்டது. கண்ணீர் விட்டு அழுதபடி, அந்த பிருந்தாவனத்தை 11 முறை சுற்றி வணங்கி விட்டுத் திரும்பி விட்டனர்.

ஆனால் அவர்களின் மகன் ஐந்து வயது அவினாஷ், தாத்தா இறந்தது தெரியாமல், அடிக்கடி தாத்தாவைப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்க, அப்போதெல்லாம் எதையோ சொல்லி சமாளித்திருக்கின்றனர். ஒரு கட்டத்தில் முடியாமல் போய் 'உன் தாத்தா இறந்து விட்டார்' என்று கூற 'இறந்து போவது என்றால் என்ன?' என்று கேட்டிருக்கிறான் அவினாஷ்.

இறந்து போவது என்றால் கடவுளிடம் போய்ச் சேர்ந்து விடுவது என்று கூறியும் அவன் சமாதானமாகவில்லை.

'அதெல்லாம் எனக்குத் தெரியாது. கடவுளிடம் போன தாத்தா என்னைப் பார்க்க வர வேண்டும். நானே கடவுளிடம் கேட்கிறேன்' என்று சாமி படங்களின் முன்னால் நின்று வேண்டிக் கொள்ள ஆரம்பித்து விட்டான்.

இறுதியில் அது நிதானம் இல்லாத காய்ச்சலில் போய் முடிந்தது. டாக்டர்கள் வந்து ஊசி போட்டு மருந்து மாத்திரை கொடுத்து விட்டுச் சென்றனர். இருந்தும் குணமே ஆகவில்லை.

நவநீதன் பயந்து நடுங்க ஆரம்பித்து விட்டார். அவரது பரம்பரையில் எப்பொழுதும் ஒரே வாரிசுதான். அவருடைய தாத்தாவுக்கு அவர்



**எந்தவொரு காயத்துக்கும் நண்பன் மருந்தாவான். ஆனால், நண்பன் ஏற்படுத்தும் காயத்துக்கு மருந்தே கிடையாது.**



அப்பா ஒரே வாரிசு. அவர் அப்பாவுக்கு நவநீதன் ஒரே வாரிசு. அவருக்கு அவினாஷ் ஒரே வாரிசு. அப்படி ஒரே வாரிசுத் தொடர்ச்சியில் அவினாஷ் இறந்து விட்டால்.. அவ்வளவுதான்! பரம்பரைத் தொடர்பே முடிந்து போய் விடும். எனவே நவநீதன் ரொம்பவே பரிதவித்துப் போனார்.

என்ன செய்வது என்றே தெரியவில்லை.

அப்போது ஒருவர் நவநீதனைப் பார்த்து, "ஓசைப்படாமல் உங்கள் அப்பா சமாதியாகி விட்ட பிருந்தாவனத்துக்குப் போய் பிரார்த்தனை செய்து விட்டு வாருங்கள். உங்கள் அப்பா எல்லோரையும் போல உடல் நலம் இல்லாமல் போய் எமன் வந்து அழைத்துப் போகப்பட்டவர் அல்ல.. எமனை அழைத்து 'என்னைக் கூட்டிச் செல்' என்று உயிர் மூச்சைத் தானாக நிறுத்திக் கொண்டவர். இப்படி சமாதியானவர்களுக்கு சக்தி அதிகம்.

இன்றும், மகான் ராகவேந்திரரின் பிருந்தாவனத்துக்கு எல்லோரும் செல்லக் காரணம்., அவரது ஆத்ம, பிராண சக்தி அங்கே பொங்கி வழிந்து கொண்டிருப்பதுதான். ஆகவே, உங்கள் அப்பாவின் சமாதியாகிய ஏலகிரி மலை பிருந்தாவனத்துக்குச் செல்லுங்கள். அவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்" என்றார்.

நவநீதனுக்கும் அதை விடச் சிறப்பான ஒரு வழி இருக்கிற மாதிரி தெரியவில்லை. எனவே, ஏலகிரி மலை பிருந்தாவனம் நோக்கி அவர் மட்டும் ஓடினார். அதே சமயம், அவினாஷ் வீட்டில் படுத்த படுக்கையாக இருக்க, பார்வதி அவன் அருகிலேயே இருந்து கவனித்துக் கொண்டாள்.

நவநீதனும் ஏலகிரி மலைக்குப் போய் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு திரும்பவும், அவருக்கு ஒரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

பார்வதி அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க, குழந்தை அவினாஷ் உற்சாகமாய் எழுந்து அமர்ந்து, பொம்மை ஒன்றுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

நவநீதன் பார்வதியை எழுப்பவும் அவளும் எழுந்து பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"என்னங்க இது ஆச்சரியம்.. காச்சல்ல கண்ணு முழி திறக்காம படுத்திருந்தான். மருந்து கொடுத்துட்டு நானும் அசந்துட்டேன். முழிச்சுப் பார்த்தா நீங்க இருக்கீங்க. இவனும் விளையாடிக்கிட்டு இருக்கான்!" என்று சொல்லி அவள் ஆச்சரியப்பட, அவினாஷ் சிரித்தபடி சொன்னான்:

"அப்பா.. தாத்தா வந்தாங்களே.."

"என்னது.. தாத்தாவா..? இங்கயா?"

"ஆமாம்ப்பா.. அவர்தான் இந்த பொம்மை தந்தாரு.." அவன் ஒரு பொம்மையைக் காட்டினான்.

சீன தேசத்து குபேரன் தாத்தா பொம்மை! நவநீதன் நெடு நேரம் குழம்பி விட்டு, பிறகு ஒரு மாதிரி சமாதானம் ஆகி, யாராவது ஒரு தாத்தா எதற்கோ வந்திருக்க வேண்டும், அவர்தான் தந்திருக்க வேண்டும். இவன் அவரைத் தன் தாத்தா நடராஜ பிள்ளையாக நினைக்கிறான் போல இருக்கிறது என்று நினைத்து சமாதானமாகி விட்டார்.

ஆனால், அதன் பின் தொட்டுத் தொட்டு அதிசயங்கள் நடக்க ஆரம்பித்தன.

ஐந்து வயது அவினாஷ், உடம்பை வில்லாக வளைத்து, தனுராசனம், உட்கட்டாசனம், வஜ்ராசனம், கபாலபதி என்று ஆசனங்களில் உன்னதமானதை எல்லாம் தானாகவே செய்ய ஆரம்பித்தான்.

"அவி.. உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?" என்று கேட்டபோது, "அதான் தாத்தா டெய்லி என்னைப் பார்க்க வாராரே, அவர்தான் சொல்லித் தந்தார்.." என்று அதிர்ச்சியளித்தான்.

"அவரா சொல்லிக் கொடுத்தாரு..?"

"ஆமாம்.."

"பொய் சொல்லாதே. அவரெல்லாம் வர மாட்டாரு."

"நான் ஏன் பொய் சொல்லணும்? வேணும்னா தாத்தா வரும்போது அவர்கிட்டயே நீங்க இப்படிச் சொன்னதைச் சொல்றேன்."

"உளறாதே. செத்துப் போனவர் எப்படிடா வர முடியும்? வயசுக்குத் தகுந்த பேச்சுப் பேசு."

"செத்துப் போனா என்ன.. சாமிகிட்ட சொல்லிட்டு வரலாமாமே. நான் கேட்டேனே.. தாத்தா சொன்னாரே.."

அவினாஷ் பதிலுக்கு பதில் அதிர்ச்சியளித்தான்.

முதலில் அவன் ஏதோ சிறுபிள்ளைத்தனமாக உளறுவதாகத்தான் நினைத்தார் நவநீதன். ஆனால் அதிசயமாக ஒரு நாள் ஒரு எட்டுக்



கட்டுடன் உட்கார்ந்து அதைப் புரட்டிக் கொண்டிருந்தான் அவினாஷ்.




"ஏது?" என்று கேட்டதற்கு, "தாத்தா வந்தபோது விட்டு விட்டுப் போய் விட்டார்" என்றான்.

நவநீதன் பயப்பட ஆரம்பித்து விட்டார். ரகசியமாக அவனைக் கண்காணிக்க ஆரம்பித்தார். அவர் கண்காணிப்பது தெரிந்தோ.. இல்லை வேறு காரணத்தாலோ, அவர் பார்க்கும்போது அவினாஷிடம் யாரும் வரவில்லை.

அதே சமயம், பாத்ரூம் போய் விட்டு வருவதற்குள் அவரே வந்து, கொடுத்த எட்டுக் கட்டைத் திரும்ப எடுத்துக் கொண்டு போய் விட்டதாகக் கூறினான். அப்பொழுது, நெற்றியில் விபூதியை இட்டதாகவும் சொல்லி நெற்றியைக் காட்ட, ஜவ்வாது வாசமுடன் விபூதி கமகமவென்று மணந்தது.

'இது எப்படிச் சாத்தியம்? யாராவது இவனிடம் வந்து விளையாட்டு காட்டுகிறார்களா? இல்லை.. இவன்தான் புரியாமல் பேசுகிறானா?'

நவநீதனுக்குத் தெரியவில்லை. ஆனால் விஷயம் எப்படியோ அக்கம் பக்கம் ஃபிளாட்டுகளில் கசிந்து, மகா சமாதியான நடராஜ பிள்ளை அவருடைய வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார் என்கிற மாதிரி பரவி விட்டது.

இந்த நிலையில்தான் ட்ரான்ஸ்ஃபரும் வந்து நவநீதன் காட்பாடி கிளம்பும்படி ஆகி விட்டது.

எனவேதான் வீட்டுச் சாவியைக் கொடுத்து வாடகைக்கு விடச் சொன்னவர், 'அப்பா விஷயம்' என்று சொல்லவும் தியாகராஜனே ஒரு விநாடி சலனப்படும்படி ஆகி விட்டது.

"என்ன தியாராஜன்.. அந்த வதந்தியை நீங்களுமா நம்பறீங்க?"

"அதெல்லாம் இல்ல. இருந்தாலும் ஒரு சின்ன நெருடல்."

"என்னவோ போங்க. செத்தும் கொடுத்தான் சீதக்காதிம்பாங்க.

எங்கப்பா நேர் எதிர் பலன் கொடுத்துக்கிட்டிருக்காரு. இல்ல.. வேற யாராவது என் மகன்கிட்ட கண்ணாமூச்சி ஆட்றாங்களானு தெரியலை. இத்தனைக்கும் அவன் கூடவே இருந்தும் கவனிச்சேன். என் கண்ணுக்கு நான் பார்த்த வரைல அப்பாவும் வரலை, தாத்தாவும் வரலை."

"நான் நினைக்கறேன்.. அவினாஷ் தனக்குத் தானே நினைச்சுப் பாத்துகிட்டு, அதைத்தான் தாத்தா வந்தாரு அப்படி இப்படின்னு சொல்லிக்கிட்டிருக்கணும். நீங்க டாக்டர்கள்கிட்ட கூட்டிக்கிட்டுப் போய் காட்டியிருக்கணும். ஆனா விட்டுட்டீங்க.." அலுத்துக் கொண்டார்.

"நானும் போகணும்னு நினைச்சேன் தியாகராஜன். ஆனா காலே வரலை. இந்த ஒரு விஷயம்தான் அவினாஷ்கிட்ட சிக்கல். மத்ததுல எல்லாம் எவ்வளவு சுப்பீரியரா இருக்கான் தெரியுமா?

இவ்வளவு ஏன்.. வீட்லயே, மாடத்துல விளக்கு ஏத்தி வெச்சுட்டு, அதையே உத்துப் பார்த்து, பெரிய மகான் மாதிரி தியானம் பண்றான். கேட்டா தாத்தாதான் சொல்லிக் கொடுத்தாருங்கறான்.

அது மட்டுமில்ல.. அவ அம்மா.. அதான் இங்க இருக்காளே பார்வதி.. இவளுக்கு ஒரு நாள் சொல்ல முடியாத அளவு தலைவலி. தைலம் போட்டு தடவு தடவுனு தடவிப் பார்த்திருக்கா. ஒண்ணும் சரிப்பட்டு வரலை. ஆனா இந்தப் பய வந்து நெத்தியத் தொட்டு ஒரு ரெண்டு தடவை அப்படியும் இப்படியும் நீவியிருப்பான். அவ்வளவுதான். தலைவலியே சுத்தமா இல்லேங்கறா. இதை என்னன்னு சொல்லறது?"

"டச் தெரபி மாதிரி தெரியுதே.."

"யாருக்குத் தெரியும்.. கேட்டா தாத்தா வீட்டுக்கு வரார். ஒவ்வொண்ணா சொல்லித் தராருங்கறான். நான் என்னத்தச் சொல்ல..?"

"சரி சரி.. இப்ப எங்க அவினாஷ்?"

"வெளிய பசங்களோட விளையாடிக்கிட்டிருக்கான்."

"கூட்டிக்கிட்டு வந்திருக்கலாமே.."

"வர மாட்டேன்னுட்டான். புரிஞ்சுக்கவே முடியல. ஒரு பக்கம் பெரிய மனுஷன் மாதிரி தியானம், யோகம்னு போறான். மறு பக்கம் இப்படி வயசுக்குத் தகுந்த மாதிரி ஒரே விளையாட்டு. என்னானு சொல்வேன்?"

நவநீதன் பெருமூச்சு விட்டார். தனது ஒரே வாரிசு இப்படி புரியாத ஒரு புதிராக இருக்கிறதே என்னும் ஆதங்கம் அதில் விரவிக் கிடந்தது.

அவர்கள் பேசிக் கொண்டிருக்க, அவ்வளவையும் உள்ளிருந்த உஷா கேட்டுக் கொண்டுதான் இருந்தாள். அவளுக்கு அவர்கள் பேச்சை எந்தக் கணக்கில் எடுத்துக் கொள்வது என்றுதான் தெரியவில்லை!



## ⏮ 4 ⏭

'பஞ்ச பூதங்களில் நெருப்பின் அம்சம் ஒளி. அந்த ஒளியை உணர்வது உடம்பிலேயே கண்தான். ஒரு ஆச்சரியம்! ஒளியை ஊடுருவிப் பார்க்க வல்ல கண்ணின் 'பாப்பா' கருமையானது. அது பதிந்து கிடக்கும் விழிப் படலம் வெண்ணிறமானது. அதுவும் கூட, தட்டையாகவும் சதுரமாகவும் செவ்வகமாகவும் எல்லாம் இல்லாமல், உருண்டு புரளக் கூடிய ஒரு கோளமெய்போல் இருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

முனைகளற்ற, உருண்டு உடலமைந்த ஒரு வெள்ளைப் பந்தில் இருட்டின் நிறத்தில் உள்ள கரிய பாப்பாதான் ஒளியை ஊடுருவுகிறது. உள்ளபடியே நமது கண் பார்க்கிறது என்று நாம் சொல்லும் ஒரு விஷயத்தில் பல உண்மைகள் இருக்கின்றனவாம். அதாவது நம் கண் பார்ப்பது என்பது பொய்யாம். வெளியே உள்ள ஒளிதான் கண்ணில் ஊடுருவி ஏறுகிறதாம். அது பார்ப்பதாக நம்மால் உணரப்படுகிறதாம்.

ஒளி நம் கண்ணில் ஊடுருவ, வட்ட வடிவில் ஒரு கரிய திரை காத்திருக்கிறது. அதில் ஒளி பட்டு பிரதிபலிக்கிறது. அந்தப் பிரதிபலிப்பைத்தான் பார்வை என்கிறோம். அந்தப் பிரதிபலிப்பை.., அதாவது, வெளியே இருந்து கண்ணின் 'பாப்பா'வில் விழும் ஒளியின் வீச்சு அளவைப் பொறுத்தே பார்வை. பார்ப்பதை வைத்து உடனே மனது, எதைப் பார்க்கிறோம் என்று நொடிக்கும் குறைவான காலத்தில் புரிந்து கொண்டு விடுகிறது. அதுதான் செய்தியாகி மூளைக்குச் சென்று அதற்கேற்ப உடம்பு இயங்குகிறது.

கண்ணின் இந்த இயக்கத்தைப் புரிந்து கொண்டு விட்டால், இதன் மூலமாகவே எதுவும் பேசாமல் பல செய்திகளைக் கூற முடியுமாம். அந்தச் செய்தியை மனமும் அறிந்து அதற்கேற்ப செயல்படுமாம்!'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

**உலகமே உங்களை விட்டுப் போனாலும் உங்களுக்காக உங்களைத் தேடி வருபவனே உண்மை நண்பன்!**



ஒரு வாரம் ஓடி விட்டது!

நிஷாவுக்குத் தரையில் கால் நிற்கவில்லை. அந்த அமெரிக்க மாப்பிள்ளையை நினைத்து நினைத்துப் பூரித்துக் கொண்டிருந்தாள்.

நடுநடுவே உஷாவையும் சீண்டிக் கொண்டுதான் இருந்தாள்.

"ஏய் குடாக்.. கொஞ்சமாவது மாடர்னா டிரஸ் பண்ணு. இப்படியே இருந்தா லோக்கல் சமையல்காரன்கூட உன்னை கன்சிடர் பண்ண மாட்டான்" என்றாள்.

எப்பொழுதும் செல்போனிலேயே பழியாகக் கிடந்து மாப்பிள்ளை ராஜேஷிடம் வழிந்து கொண்டிருந்தாள். உஷாவை அவள் செய்கை மிகவும்தான் வாட்டியது.

ஒரு கட்டத்தில் உஷா, நிஷாவை ஓங்கி ஒரு அறை விடும் அளவுக்குப் போய்விட்டது. இவள் அறைய பதிலுக்கு அவள் அறைய.. ஒரே ரகளை.

தியாகராஜன் இடையிட்டு சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

அத்தை கனகம் நடுவில் ஒரு அழகான வழியைச் சொன்னாள்.

"உஷா.. நீ பேசாம நவநீதன் சார் ஃபிளாட்டுக்குப் போய்டு. சாப்பிட மட்டும் இங்க வா. இவ முகத்துலயே விழிக்க வேண்டாம். அந்த ஃபிளாட் சாவி நம்ம வீட்லதானே இருக்கு..?" என்றாள்.

ஆரம்பத்தில் உஷா அந்தச் சாவியை எடுத்துக் கொண்டு அந்த வீட்டுக்குப் போய்த் தங்க ரொம்பவும்தான் பயந்தாள். ஆனால், நிஷாவை விட அந்த வீடு ஒன்றும் பயங்கரமானது இல்லை என்று ஒரு க்ஷணம் நினைத்தவள் பேசாமல் அங்கே போய் விட்டாள்.

ஒரு தலையணை, ஒரு பாய், ஒரு போர்வை, ஒரு டவல், ஒரு சோப் பாக்ஸ், பிளாஸ்டிக் பக்கெட் ஒன்று, மக் ஒன்று..

மேற்படி சமாசாரங்களுடன் அந்த வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள், குப்பையும் கூளமுமாய் இருந்த ஹாலையும் அறைகளையும் முதல் காரியமாய்க் கூட்டி சுத்தப்படுத்தினாள்.

ஒரு வாரம் ஆகி விட்டது, நவநீதன் சாவி கொடுத்து.. ஆனால் தியாகராஜனோ தினம் போய்ப் படுக்க வேண்டும் என்று நினைத்ததோடு சரி. வயசுப் பெண்கள் இருவரைத் தனியே விட்டு விட்டுப் போய் ஒரு வீட்டில் படுப்பதா என்று நினைத்தோ என்னவோ, இங்கே வந்து படுத்துக் கொள்ளவே இல்லை. உஷாதான் முதன் முதலில் வந்திருக்கிறாள்.

இப்பொழுது வந்திருப்பது கூட தியாகராஜனுக்குத் தெரியாது. அவர் உஷாவுக்கு மாப்பிள்ளை பார்ப்பது தொடர்பாகத்தான் பொள்ளாச்சி



வரைக்கும் போயிருக்கிறார்.

எனவே உஷாவுக்கு சௌகர்யமாகப் போய் விட்டது. ஒரு வழியாக சுத்தம் செய்து முடித்தவள், பாத்ரூம் பக்கம் சென்று குழாயைத் திறந்து தண்ணீர் வருகிறதா என்றெல்லாம் பார்த்து விட்டு வந்து பாயை விரித்தாள்.

செல்போனை வீட்டில் விட்டு விட்டது நினைவுக்கு வந்தது.

அதை எடுத்து வந்து விட்டால் அமைதியாக பாட்டுக் கேட்கலாம் என்று தோன்றியது.

**உங்களை நீங்களே நம்புவதை நிறுத்தி விட்ட பிறகும் கூட, உங்கள் மீது நம்பிக்கை வைப்பவன்தான் நண்பன்.**



அதற்காக வெளியே கிளம்ப கால் எடுத்தவள், அப்பொழுதுதான் வீட்டின் நடுவில் ஒரு அறை சாத்தியே இருப்பதைப் பார்த்தாள்.

அதை நவநீதன் இருந்தவரை பூஜை அறையாகப் பயன்படுத்தி வந்தது ஞாபகம் வந்தது. உள்ளே ஒரு ஷெல்ஃப்! அதில்தான் சுவாமி படங்கள் இருந்தன. பக்கத்தில் ஒரு மூங்கில் ஷெல்ஃப். அதில் நிறைய புத்தகங்கள்.

ஆவலாகக் கதவைத் திறந்து உள்ளே பார்வையை ஓட விட்டாள் உஷா! பலத்த ஆச்சர்யம் தரும் ஒரு விஷயம் காத்திருந்தது. உள்ளே நடு மாடத்தில் சுவாமி ஷெல்ஃபுக்கு மேலே ஒரு அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அருகே சென்று பார்த்தாள். விளக்கில் வழிய வழிய எண்ணெய் என்று இல்லாமல், வறண்ட குளம் போலக் கிடந்தது குழிப் பாகம். இருந்தும், திரியில் சுடர் எந்தச் சலனமும் இன்றி எரிந்தபடி இருந்தது!

'எப்படி இது சாத்யம்? ஒரு வேளை எண்ணெயெல்லாம் தீர்ந்து முடிந்த நிலையில் கதவைத் திறந்து நான் பார்த்திருக்கிறேனா!'

அவளுக்குள் எண்ணங்களின் ஓட்டம்! இறுதியில் அப்படித்தான் இருக்க முடியும் என்கிற எண்ணத்துடன் திரும்பிக் கதவைத் தாழிட்டு விட்டு, வெளியே வந்து பூட்டி விட்டு வீடு நோக்கி நடந்தாள். நடக்கும்போதும் அதே சிந்தனை.. ஒரு வாரமாய் பூட்டியிருக்கும் ஒரு வீட்டில் எப்படி ஒரு விளக்கு எரிய முடியும்? ஒருவேளை.. தியாகராஜன் காலையில் பொள்ளாச்சிக்குப் புறப்படும்போது இங்கே வந்து விளக்கேற்றி வைத்து

விட்டுப் போயிருப்பாரோ? அப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது.

வீட்டுக்குள் நுழைந்தவளை குத்திட்டி போலப் பார்த்துக் கொண்டிருந்தாள் நிஷா. உஷா அந்தப் பார்வையை லட்சியமே செய்யாமல் செல்போனைத் தேடத் தொடங்கினாள்.

அது பீரோ ஒன்றின் மேல் இருந்தது. எடுத்து பட்டனை அழுத்தி அழுத்திப் பார்த்தாள். டிஸ்ப்ளே இல்லை. காதோரமாக வைத்து ஒரு ஆட்டு ஆட்டிப் பார்த்தாள். பார்த்துக் கொண்டேயிருந்த நிஷா உடனே சிரித்தாள். சரியான கேலிச் சிரிப்பு.

"எதுக்குடி இப்படி சிரிக்கிறே?"

"சிரிக்காம.. அது என்ன உண்டியலா..? காது கிட்ட வெச்சு குலுக்கிப் பார்க்கற.. செல்லுடி.. சார்ஜ் பண்ணினாத்தான் வொர்க் ஆகும்.."

உஷா முகமும் அதைக் கேட்டு அசடு வழிந்தது. "எதையும் யோசிச்சுப் பார்த்துச் செய். அப்பா உனக்கு மாப்பிள்ளை பார்க்கத்தான் பொள்ளாச்சிக்குப் போயிருக்கார். இந்த மாப்பிள்ளையும் அமெரிக்காதான், இவனும் உன்னைப் பார்க்க வந்துட்டு 'என்னைத்தான் பிடிச்சிருக்கு'னு சொல்லிட்டுப் போறான்." நிஷாவின் பேச்சு உஷாவைக் கூர்மையோடு குத்தியது.

"இந்த கர்வம் வேண்டாண்டி. அப்புறம் ரொம்ப சிரமப்படுவே."

"நான் எதுக்கு சிரமப்படணும்? எனக்கு மூளை இருக்கு. நான் ஒண்ணும் பயந்தாங்கொள்ளியும் கிடையாது. இங்க இருக்கப் பிடிக்காம யார் வீட்லயோ படுத்துக்கறதுக்கு.."

நிஷா தொடர்ந்து ஊசி போல் குத்திக் கொண்டே போனாள்.

உஷாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து உருள ஆரம்பித்தது. நல்லவேளை.. அத்தை கனகம் வந்து இடையில் நுழைந்து சமாதானம் செய்ய ஆரம்பித்தாள்.

"என்னடி.. எதுக்கு அழுகை..? இவ அப்படி என்ன சொன்னா?"

"ஆமா.. என்னையே சொல்லு.. நல்லா ட்ரஸ் பண்ணிக்கோமனு சொன்னேன். இது தப்பா?"

"அதை எதுக்கு நீ சொல்றே.. அவளுக்குத் தெரியாதா?"

"ஆமா.. தெரிஞ்சிருந்தா வந்த மாப்ளை எதுக்கு என்னைப் பிடிச்சிருக்குனு சொல்லணும்?"

"அவன் இவளைப் பிடிக்கலைனு சொல்லலை. அவன் உணர்வு வேற, இவ உணர்வு வேறயா இருக்குனுதான் சொன்னான். அத நீ புரிஞ்சுக்கோ."

"இதெல்லாம் சமாளிப்பு. அல்டிமேட்டா முடிவு என்ன? எனக்கு






இந்தப் பட்டிக்காடு ஒத்து வராதுங்கறதுதானே?"

நிஷாவிடம் கர்வம் கொடி கட்டிப் பறந்தது. தன் பேச்சும் செயலும் உஷாவை எவ்வளவு பாதிக்கும் என்று உணர்ந்தவளாகவே தெரியவில்லை.

கனகத்துக்கும் அவளிடம் பதிலுக்கு பதில் என்று பேசிக் கொண்டே போக விருப்பமில்லை.

"உஷா! நீ கவலைப்படாதடா.. உன் மனசுக்கு ஒரு தங்கமான மாப்ளை உனக்கு வருவான். அடுத்தவங்க மனசைப் புண்படுத்தற யாரும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது. நீ நம்பிக்கையோட இரு.." என்று உஷாவுக்குத்தான் ஆறுதல் கூறினாள்.

"என்ன அத்தை சாபம் விட்றியா.. நான் ஒண்ணும் பொறாமையில பேசல. ஒண்ணு நல்லாத் தெரிஞ்சுக்கோ.. இவ இப்படி மடிசஞ்சியா, மண்ணாந்தையா, எதுக்கெடுத்தாலும் அழுவற அழுமூஞ்சியா இருக்கறவரை, இவளால ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக்க முடியாது.

ஆணும் பெண்ணும் சமம்னு நினைக்கற காலம் இது. ஞாபகம் வெச்சுக்கோ. இப்ப சொல்றேன். இவ இப்படியே இருந்தா ஒரு கல்யாண சமையல்காரன்கூட இவளைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். ஞாபகம் வெச்சுக்கோ.." – நிஷா வரிந்து கட்டினாள்.

"சரிடி.. உன் உபன்யாசத்தை நிறுத்திக்கோ. கல்யாணங்கிறது ஏற்கெனவே தீர்மானமான ஒன்று. அதை யாரும் நான்தான் செய்து வெச்சேன்னு சொல்ல முடியாது. நான் பயன்பட்டேன்னு வேணும்னா சொல்லிக்கலாம். அந்த அளவுக்கு, கடவுளால தீர்மானிக்கப்பட்ட விஷயம் அது. தயவுசெய்து உனக்குத்தான் பேசத் தெரியும்னு பேசாம, வாய மூடிக்கிட்டு இரு. உங்கப்பாவுக்குத் தெரியும். இவளுக்கு எப்படி கல்யாணம் பண்ணி வைக்கணும்னு!"

கனகம் நிஷாவுக்கு ஒரு ஆப்பு வைக்க, தியாகராஜனும் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

"வா தியாகு.. என்னப்பா சரேல்னு வந்துட்டே.. ஊருக்குப் போனியா இல்லையா?"

"இல்லக்கா.. போக அவசியம் இல்லாதபடி பையனோட அப்பாவை நம்ம சண்முகசுந்தரம் வீட்லயே பார்க்கும்படி அமைஞ்சது.. அவரும் 'பையனோட நான் நாளைக்கே பொண்ணு பார்க்க வரேன், நீங்க எதுக்கு இதுக்காக பொள்ளாச்சி வந்துகிட்டு'னு சொல்லி ஒரு வேலையை மிச்சப்படுத்திப்பிட்டார்."

"இதைத்தான் கும்பிடப் போன தெய்வம் குறுக்க வந்ததுனு சொல்வாங்க. அப்ப பெரியவ உஷாவை பொண்ணு பார்க்க நாளைக்கு வாங்கனு சொல்லு."

"ஆமாங்க்கா.. நீயே இருந்து எல்லா ஏற்பாட்டையும் செய்துடு."

"பையன் எப்படினு விசாரிச்சியா?"

"விசாரிச்சு பிடிச்சிருந்தாதானேக்கா நான் அடுத்த கட்டத்துக்கே போவேன்."

"அப்ப சரி.. பையன் அமெரிக்காதானே?"

"பின்ன.. நிஷாவுக்கு அமைஞ்ச வரன் மாதிரியேதான். சொல்லப் போனா அந்த மாப்ளைய விட இந்தப் பையனுக்கு சொத்து பத்து ஜாஸ்தி."

தியாகராஜன் சொல்லவும் கனகம் உஷாவைப் பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு புது விதப் பிரகாசம். நிஷாவையும் பார்த்தாள். அவள் கண்ணாடி முன் நின்று கொண்டு, தலைமுடியில் சிடுக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். கனகம் பார்க்கவும், ஒரு பார்வை.. படு அலட்சியப் பார்வை பார்த்தாள்.

"எப்படியோ.. எல்லாம் நல்லபடியா நடந்தா சரி. தாயில்லாத புள்ளைங்க.. போற இடத்துலயாவது குடும்பம் உறவுகள்னு சந்தோஷமா இருக்கட்டும்."

கனகம் மனம் கசிந்து வாழ்த்தினாள்.

"நிஷாக் குட்டி.." தியாகராஜன் இளைய மகளைத்தான் கூப்பிட்டார். அவளும் "என்னப்பா?" என்று கேட்காமல் கேட்டபடி நின்றாள்.

"நாளைக்கு உஷாவை சும்மா தங்க ரதம் மாதிரி அலங்காரம் பண்ணி மாப்ளை முன்னால நிறுத்தணும். உன் லைன் கிளியர் ஆன மாதிரி, இவ லைனும் கிளியர் ஆகணும். என்ன?"

"சரிப்பா.. தங்க ரதத்தை எல்லாம் அமெரிக்கா மாப்ளைங்க ஏத்துக்க மாட்டாங்க. சிம்பிளா ஒரு போனி டைல். கேஷுவலா ஒரு காட்டன் சாரி. சின்னதா ஒரு ஸ்டிக்கர் பொட்டு.. ஒரு மெல்லிசான சங்கிலி.. ஒரு பவுடர் இல்லாத ஃபேஷியல் பண்ண முகம். இப்படி இருந்தாதான் யூஎஸ் மாப்ளைங்களுக்குப் பிடிக்கும்."

"சரிம்மா.. அப்படியே இவளை ரெடி பண்ணிடு."

"இந்த குடாக்கு என் பேச்சைக் கேக்காதே. இது இப்ப என்னை எனிமியால்ல நினைக்குது."

"என்னம்மா நீ.. இருக்கறது ரெண்டு பேர். உங்களுக்குள்ள சண்டைனா கேக்கவே அசிங்கமா இருக்கும்மா. தண்ணி அடிச்சு தண்ணி விலகாதும்மா."

"வேண்டாம்ப்பா.. இந்த மாதிரி பழைய ப்ராவெர்ப் சொல்லி போரடிக்காதீங்க. இவ என் பேச்சைக் கேட்டா போதும். நான் பாத்துக்கறேன்."

## பல்லியை ஏன் அடிப்பதில்லை?



உலக சிருஷ்டியின்போது தோன்றிய மிக மிகப் பழமையான ஜீவன்களில் பல்லியும் ஒன்று. விஷ வண்டுகளையும் பூச்சிகளையும் உண்டு மனித குலத்தைக் காப்பாற்றி வருபவை பல்லிகள். பாம்பு போலவே பல்லியும் சட்டை உரிக்கும். கண், வால், போன்ற எந்த அசைவும் இன்றி ஒரே இடத்தில் மூன்று மணி நேரம் கூட அப்படியே இருக்கும்.

ஆன்மிகம் பல்லியைப் போற்றுகிறது. வீடுகளில் சேரும் தீவினை கர்மங்களை தன் யோகாக்னியில் பஸ்பம் செய்கிற யோக சக்தியைப் பல்லி பெற்றுள்ளது. இல்லங்களிலும் பரவெளியிலும் பரவிக் கிடக்கிற தீய எண்ணங்களை கிரகித்து உரிசட்டையாக மாற்றுகிறது. அதனால்தான், பல்லி சொல்லுக்கு பலன் இருக்கிறது. கர்ம பந்தம், பூர்வ ஜென்ம பாவங்கள், பிறவித் தளைகள் ஏதுமில்லாத ஜோதி தத்துவ தேகத்தை உடைய பல்லிகள், மிகவும் தெய்விகமானவை. அதனால்தான் நம பல்லியை அடிப்பதில்லை. அடிக்க வேண்டும் என்று தோன்றுவது கூட இல்லை.

- எம்.மாலதி மணியன், புதுச்சேரி

(சென்னை, குன்றத்தூர், நாட்சாயணி அம்மன் கோயில் அர்ச்சகர் குமார சிவாச்சாரியாரிடம் சிபாரக்கப்பட்டது)

"உஷா.. என்னடா இது? தங்கச்சி பேச்சக் கேளுடா."

"நல்லாருக்குப்பா நீங்க சொல்றது.. எனக்கு என்னவோ எதுவுமே தெரியாதுங்கற மாதிரி இருக்குதுப்பா உங்க பேச்சு."

"என்னம்மா நீ.. உன் நல்லதுக்குச் சொன்னா அதையே தப்பா எடுத்துக்கிட்டு என்னையே திருப்பறியே."

"பின்ன என்னப்பா.. வெடுக்வெடுக்குன்னு பேசறா. பெரிய இவளு இவளுக்கு நினைப்பு. இவ பேச்சை நான் கேக்கவா.. யார் பேச்சை யார் கேக்கிறது..?"

"ஐயோடா.. இப்ப உனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடக்கணுமா வேண்டாமா?" தியாகராஜன் பெரிய குரலில் ஓங்கலாகக் கத்தியபடி கேட்டார். உஷாவும் அதைக் கேட்டு நடுங்கியவளாகக் காதைப் பொத்திக் கொள்ள, நிஷா குறுக்கிட்டாள்.

"வேண்டாம்ப்பா.. விட்ருங்க. அவ விருப்பம்போல அவ வரட்டும். நான் மூச்சு விட மாட்டேன். நல்லது நடந்தா சரி.." என்றவளாய் விலகிப் போனாள்.

தியாகராஜனுக்கு இருவரின் திருமணத்தையும் எப்படி நடத்தப் போகிறோமோ என்றுதான் தோன்றியது.

## 5

'மனம்'

இதைப் பற்றி எவ்வளவோ பேர் ஆராய்ந்து விட்டார்கள். இதைக் குரங்கு என்றும் கோட்டான் என்றும் வர்ணித்தவர்களே அநேகர். ஆனால், இது ஒரு யானை என்று சொல்லி 'புரிதல்' என்னும் அங்குசத்தால் வெகு அழகாக அடக்கி ஆளலாம் என்று சொன்னவர்கள் சிலர்தான்.

மனம்தான் செயல்பாடு பற்றி நினைக்கிறது. நினைப்புதான் செயலாகிறது. இந்த செயலின் சாயல் 'பாடி லாங்வேஜ்' (Body Language) எனப்படும். ஒருவரின் அங்க அசைவுகளை வைத்து, அவர் நினைப்பதையும் அவரின் மன அழகையும் கணிக்க முடியும்.

இதெல்லாமே அறிவுப்பூர்வமான, சாத்யமான, உலகம் ஒப்புக் கொண்ட அணுகுமுறைகள். இதற்கு அப்பாற்பட்டு புதிராய் சில விஷயங்கள் மனத்தைப் பொறுத்தவரை உண்டு. அதில் ஹிப்னாடிசமும் மெஸ்மரிசமும் ஒன்று. இதையும் விஞ்ஞானம் என்று சொன்னாலும், இதை ஒரு முழு வெற்றி பெற்ற தீர்மானமான விஷயமாக அறிஞர்கள் கருதுவதில்லை.



**கடவுள் நம்மை அக்கறையாக கவனித்துக் கொள்ள கண்டுபிடித்தார் நண்பனை!**



ஹிப்னாடிசம் பற்றியும், மெஸ்மரிசம் பற்றியும் ஆக்ஸ்போர்டு பல்கலை நூலகத்தில் பல புத்தகங்களும், ஆய்வுக் கட்டுரைகளும் உள்ளன. அவற்றை வைத்து இந்தக் கலையைக் கற்றுக் கொள்ள முயன்ற பலர் தோல்வியையே தழுவியுள்ளனர்.

ஹிப்னாடிச, மெஸ்மரிச அறிஞர்களாக தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலரும் கூட, எல்லோர் மனங்களையும் கட்டுப்படுத்த முடியாதவர்களாகவே உள்ளனர்.

திரைப்படம், தொலைக்காட்சிகளில் இந்த விஷயத்தைப் படு மிகையாக சித்தரித்துள்ளனர். எனவே அவற்றைப் பார்த்து இந்த மனத்தை வசப்படுத்தும் கலையைப் புரிந்து கொள்ள முயலுவது என்பது படு முட்டாள்தனமான ஒன்று.

அதே சமயம், மந்திர தந்திரங்கள் இந்த வித்தையைச் சுலபமாக கற்றுத் தருகின்றன என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்த மந்திர தந்திரங்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். தென் அமெரிக்காவில் ஒரு பாதிரியார் பலரைப் பார்வையால் அமைதிப்படுத்தியிருக்கிறார்.

மேற்கு ஜெர்மனியில் ஒரு பெண்மணி, பல கைதிகளின் உள் மன ரகசியங்களை அறிந்து போலீஸுக்குச் சொல்லும் ஒரு உளவாளியாகவே இருந்திருக்கிறாள்.

இந்து மதத்தில்.. குறிப்பாக சித்தர்கள் கலாசாரத்தில்.. மனத்தை ஆள்வது, மயக்குவது, மாற்றுவது என்பதெல்லாம் மிகச் சாதாரண ஒன்றாக உள்ளது.

அதேபோல் மனத்தைப் படிப்பது என்பதும் இங்கே சாதாரண ஒரு விஷயம். கம்பளத்து நாயக்க சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் மனத்தில் இருப்பதை சாதாரணமாகச் சொல்லி விடுகின்றனர்.

வசிய சாஸ்திரம், மனோவசியம், ராஜ வசியம், வசித்துவம், சாஸ்த்துவம், ஸ்த்ரீ வசியம், சூட்சும பாதாள ஞானம்.. என்று இங்கே மனது தொடர்பாய் பல நூல்கள்.

பொதுவில் எந்த ஒரு மர்மமான விஷயமும் புரியாதவரை மந்திர

ஞானமாகவே கருதப்படும். புரியத் தொடங்கி விட்டால் அது விஞ்ஞானமாகி விடும்.'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

இரவு.

உஷா படுக்கக் கிளம்பினாள்.

"அந்த வீட்டுக்கா போறே?" கனகம் கேட்டாள்.

"ஆமாம் அத்தை.. எனக்கு இங்க இருக்கவே புடிக்கல."

"அதுவும் சரிதான். டிரான்சிஸ்டர் எடுத்துக்கிட்டு அங்கயே போய்டு. ஃபேனெல்லாம் இருக்கா?"

"இல்லை.. எனக்கு ஃபேன் இல்லைன்னா பரவால்ல.."

"அட நீ வேற.. கொசு ஆஞ்சிடும். டேபிள் ஃபேன் எடுத்துக்கிட்டுப் போ."

"பரவால்ல. விடு அத்த.."

"சொன்னா கேள் உஷா.. கொசு கடிச்சு மூஞ்சி தடிச்சுப் போனா நல்லாவா இருக்கும். நாளைக்கு அமெரிக்க மாப்ளை வாராருல்ல.."

அத்தை கனகம் பாய்ன்ட்டைப் பிடித்தாள். பின் அவளே டேபிள் ஃபேனை எடுத்துக் கொண்டு போய் அந்த 'சி' பிளாக் வீட்டில் வைத்து விட்டு, வீட்டையும் ஒரு பார்வை பார்த்து விட்டு வந்தாள்.

"வீடு நல்லா பெரிய வீடு.. தாராளமா 10,000 ரூபா வாடகை தரலாம்.." என்றாள் தம்பி தியாகராஜனிடம்.

"தானுமே.."

"ஏன் தராம.. 1000 சதுர அடி வீடு. கீழே தரை எல்லாம் மார்பிள்."

"என்ன மார்பிளோ.. அந்த வீட்டுப் பேச்சை எடுத்தாலே சாமியார்



**சக ஊழியர்:** உங்க மனைவியோட சமையலை ஒரு நாள் கூட சாப்பிடத் தர மாட்டேங்கறீங்களே..

**வடிவேலு:** என்னைய என்ன அவ்வளவு கொடுமைக்காரன்னா நெனைச்சீங்க?

- எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி



வீடானு கேக்கறாங்க.."

"ஏன்.. சாமியார் வீடா இருந்தா என்னவாம்?"

"அவரு வந்துட்டு வந்துட்டுப் போறாருன்னா யாருக்காவது குடி வர தைரியம் வருமா?"

"இதோ பாரு.. இதெல்லாம் புரளி. இதே அபார்ட்மெண்ட்டுல 'பி' பிளாக்ல ஒரு பொண்ணு தூக்கு மாட்டி தற்கொலை பண்ணிக்கிட்டா. இப்ப அங்க யாரும் குடி இல்லையா என்ன?"

"என்னத்தச் சொல்றது.. சில விஷயம்லாம் பாவிட்டா மாத்த முடிய மாட்டேங்குது. இந்த இன்டர்நெட் யுகத்துலதான் இந்த மாதிரி விஷயங்களை மக்கள் அதிகமா நம்புறாங்களோனு தோணுது. டி.வி. பாக்கறேல்ல.. நவரத்ன கல்லு விக்கிறவங்க, வாஸ்து ஜோசியம் சொல்றவங்க, தினப்பலன் சொல்றவங்கதான் டி.வியைப் பிடிச்சு வெச்சிருக்காங்க. வாஸ்துவுக்காக வீட்டை இடிச்சுக் கட்டுறதெல்லாம் இப்பதானே நடக்குது!"

"அதான் எனக்கும் புரியல. ஒரு பக்கம் விஞ்ஞான சௌகர்யங்களும் அதிகமாகிக்கிட்டே போகுது. செவ்வாய் கிரகத்துல உயிர் வாழ முடியும்கறாங்க. நானோ தொழில் நுட்பம்கிறாங்க. தெருவுல குச்சி ஐஸ் விக்கறவன் கூட ஒரு செல்ஃபோனை வெச்சுக்கிட்டு கித்தாப்பா போறான். இது ஒரு பக்கம்னா.. மறுபக்கம் யானைப் பார்.. ஐயப்பன் மலைக்கு மாலை போட்டுக்கறதென்ன.. பிரதோஷம்னு கோயிலுக்குப் போவுறதென்ன, திருவண்ணாமலைக்கு போய் கிரி பிரதட்சணம் பண்றேன்கறதென்ன..? காலத்தைப் புரிஞ்சுக்கவே முடியலியே தியாகராஜா."

"எனக்கும்தான்க்கா.. ஒரு விஷயத்துலயும் தெளிவா ஒரு முடிவுக்கு வர முடியறதில்ல.."

கனகமும் தியாகராஜனும் யதார்த்தமாகப் பேசிக் கொள்ள, அதுவரை பொறுமையாக இருந்த நிஷா பொறுமையிழந்து வாயைத் திறந்தாள்.

"அத்தையம்மா.. எந்தக் காலத்துலயும் மனுஷனோட புத்திதான் ஜெயிச்சுக்கிட்டு வந்துருக்குது. அதைத் தெரிஞ்சுக்க, அதே சமயம் ஆவி, பேய், பிசாசு இதெல்லாம் படு பயங்கர பித்தலாட்டம்னும் கண்டுபிடிச்சு சொல்லியாச்சு.

ஒருத்தர் எப்ப பார்.. ஒரு நாற்காலியில உட்கார்ந்திருக்கார்னு வை. அவர் எழுந்து போன பிறகும் அவர் சூட்டுக்கு அங்க வெப்ப அலை கொஞ்ச நேரம் இருக்கும். இதை சூப்பர் பவர் லென்ஸ் கொண்ட கேமராவால படம் எடுத்து, ஆவினு ஒருத்தன் புளுகினதைக் கிழிச்சு கேப்பையை நட்டுட்டாங்க.

ஆவி, பேய், பிசாசு இதெல்லாம் உண்மைனு ஒரு பேச்சுக்கு வெச்சுப்போம். இந்த உலகத்துல இப்போ உயிரோட இருக்கறவங்களை விட, இறந்தவங்க எண்ணிக்கை அதிகம். என்னா ஆவரேஜா ரெண்டாயிரம் வருஷமாத்தான் இந்த உலகம் இருக்குதுன்னே கணக்கு வெச்சாலும் இந்த ரெண்டாயிரம் வருஷத்துல செத்துப் போன அவ்வளவு ஆவியும் பேயும் நிஜமா இருந்திருந்தா, அதுங்களுக்கே இந்த பூமியில இடம் இருக்காது. அப்புறம் மனுஷன் எங்க பொறந்து வளர்றது?"

நிஷா நீட்டிக் கொண்டே போனாள்.

"போதும்.. நம்ம நவநீதன் சார் வீட்டுக்கு யாரை எவ்வளவு வாடகைக்குக் குடி வைக்கலாம்னு ஆரம்பிச்ச ஒரு விஷயம், இப்படி ஒரு உபன்யாசமாவே நீண்டு போச்சே.. எது எப்படியோ.. இந்த சாக்குல நிஷாவுக்கு எவ்வளவு உலக ஞானம் இருக்குங்கறது தெரிஞ்சு போச்சு" என்றபடியே கொட்டாவி விட்டார் தியாகராஜன்.

உஷாவும் பாயை விரித்து கொட்டாவி விடப் போனாள். தலைமாட்டில் செல்போனிலிருந்து எஃப்.எம்.மின் கசிவு. எல்லாம் புத்தம் புதிய பாடல்கள்.. வேறு நிலையத்துக்கு மாற்றினாள். எதிலுமே அவள் மனம் கவரும் பாடல்கள் இல்லை. பேசாமல் அணைத்து விட்டுப் படுக்கலாம் என்று தோன்றியது. அணைத்தாள். படு நிசப்தமாக இருந்தது.

மெல்லிய ஹாலின் நைட் லாம்ப் ஒளி மட்டும் கசிந்தபடி இருந்தது. அதுவும் ஆஃப் ஆகி ஃபேனும் நின்றதில், கரண்ட் கட் என்பது தெரிந்து போயிற்று. நிசப்தத்தின் பரிமாணம் கூடியது போல இருந்தது. பம்மென்று காதை அழுத்தியது நிசப்தம். ரொய்ங்ங் என்று ஒருவித சப்தம் காதுக்குள் கேட்டது. நிசப்தம் என்பது சப்தமே இல்லாதது என்று யார் சொன்னது? அதுதான் மிக ஆபத்தான, அமைதியைக் கெடுக்கும் சப்தம் என்று நினைத்துக் கொண்டாள்.

அருகில் கர்ட்டனால் மூடப்பட்ட ஜன்னல். எழுந்து போய் திறந்து விட்டால் காற்று வரும் என்று தோன்றியது. அப்படியே யாராவது வருகிறார்களா என்று எட்டிப் பார்க்கலாம் என்றும் தோன்றியது.

ஒரு சௌகரியமே அசௌகர்யமாக மாறுவது இப்படித்தான்.. புரண்டு படுத்தாள். கசகசவென்று இருந்தது. கும்மிருட்டில் ஜன்னல் மட்டும் பார்க்க முடிந்த மாதிரி நூலளவு வெளிச்சத்தில் தெரிந்தது.

வெட்டிப் பிடிவாதம். வீணான சண்டை காரணமாக வந்து மாட்டிக் கொண்டு விட்டோமோ என்று கூடத் தோன்றியது. அதே வேளையில், அந்த ஹால் முழுக்கப் பார்க்க முடிந்த மாதிரி மெலிதாய் வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.





'அய்யோ.. எப்படி இது சாத்யம்..?' என்று படுத்த நிலையில் எழுந்து அமர்ந்து பார்த்தாள்.

வெளிச்சம் அதிகமாகிக் கொண்டே போனது.

'எப்படி.. எப்படி? எங்கிருந்து வருகிறது?' பார்வையைச் சுழல விட்டாள். ஹாலின் சதுர வடிவ அந்த பாகத்தில், பூஜை அறைக் கதவு திறந்திருந்த நிலையில் உள்ளே எந்தப் படங்களும் இல்லாத காலியான ஷெல்ஃபின் மையத்தில் அகல் விளக்கு..

முதல் முதல் அவள் வீட்டுக்குள் வந்து பார்த்தபோது எரிந்து கொண்டுதான் இருந்தது.

இப்பொழுது மீண்டும்!

'எப்படி? யார் ஏற்றியது.. ஒருவேளை அது அணையா தீபமாய் எரிந்து கொண்டே இருக்கிறதோ? கதவு மூடியிருந்ததால் வெளிச்சம் வெளியே பரவவில்லையோ.. இப்பொழுது காற்றோ இல்லை பூனையோ கதவைத் திறந்திருக்க வேண்டும். அதனால் வெளிச்சம் வெளியே பரவியுள்ளதோ?

அது சரி.. எப்படி ஒரு அகல் விளக்கு அணையாமல் தொடர்ந்து எரிய முடியும்?'

கேள்வி மலைப் பாறையாக மனத்தை அழுத்திற்று. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு எழுந்தாள். மெல்ல அறைக்குள் சென்று விளக்கருகே முகத்தைக் கொண்டு சென்று பார்த்தாள்.

விளக்கில் எண்ணெய் இருப்பதற்கான சுவடே இல்லை. ஆனால் ஒரு இலையைச் சுருட்டி அதன் நுனியில் தீயிட்டது போல தீபம். ஒரு வெளிர் மஞ்சள் ஸ்டிக்கர் பொட்டு ஒன்று தகதகக்கிற மாதிரி இருந்தது. மற்றபடி எந்த விதமான சப்தமும் இல்லை. மனத்தை அச்சப்படுத்தும் விஷயங்கள் எதுவும் இருக்கின்ற மாதிரியும் தெரியவில்லை.

சில விநாடிகள் அந்த அகல் விளக்கை உற்றுப் பார்த்தவள், திரும்பி வந்து படுக்கையில் சரிந்தாள். மஞ்சள் தூளைச் சலித்தது போல அறை முழுக்க அதன் புழுதியாட்டம் மெல்லிய வெளிச்சம்.

கூரையில் ஃபேன் பவர் பாயின்ட் நேர் எதிரில் தெரிந்தது. அதை ஒட்டி ஒரு சாண் நீளத்துக்கு நன்கு பருத்த பல்லி. 'அய்யோ மேலே விழுந்து விடுமோ..' பாயை இழுத்துப் போட்டுக் கொண்டால் என்ன என்றும் தோன்றிற்று. அதே போல எழுந்து பாயை இழுத்து விட்டுக் கொண்டாள். அப்பொழுது செல்போன் தலைகுப்புற விழுந்து, 'ஆன்' ஆனது போல ஒலிக்க ஆரம்பித்தது.

'அவினாஷ்.. அவினாஷ்.. எங்க ராஜா போய்ட்டே? தாத்தா






வந்திருக்கேன் பார். நான் சொல்லிக் கொடுத்த மாதிரி தீப ஜோதி கர்ப மாத்து இலையால விளக்கு ஏத்திட்டே நீ.. நல்ல இலை! தொடர்ந்து 48 நாள் எரியும்!

இந்த விளக்கொளி ரொம்ப விசேஷமானது ராஜா. இதை ஊன்றிப் பார்த்துச் செய்யற பயிற்சி ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'னு பேர். அதை எல்லாம் நான் உனக்கு போகப் போக சொல்லித் தருவேன்.

மனதுல வைராக்யம் உள்ளவங்க இந்தப் பயிற்சியைப் பத்தே நாள்ல முடிச்சுடலாம். பூர்வ ஜன்ம கர்மமும் இடம் தரணும். ஏன்னா பெரிய தவப் பயிற்சி இது. இந்தப் பயிற்சி முடிஞ்சதுக்கான அடையாளம் என்ன தெரியுமா?

அகல் விளக்குல தெரியற அந்த தீப ஜோதி நெற்றிப் பொட்டுல எரியற மாதிரி தோணும். அப்ப மெலிசா ஒரு குறுகுறுப்பும் உடல் முழுக்க ஒரு பரவசமும் ஏற்படும். இந்த நிலைல அப்படியே கண்களை மூடி சுபாலபதி பயிற்சி செய்யணும். அப்ப அந்த விளக்கொளி கொஞ்சம் கொஞ்சமா உள்ளுக்குள் மடங்கி, கண்கள் முதல்ல எரியற மாதிரி தோணும். பிறகு அப்படியே நீலோற்பல மலர் தண்ணியில விழுந்து சில்லிட்டுப் போன மாதிரி கண்ணிரண்டும் ஆயிடும். இப்படி ஆயிட்டா 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'யில் ஒரு முழுமை கிடைச்சாச்சுனு பொருள்.

அதன்பின் யாரோடையும் வார்த்தைகளால பேச வேண்டிய அவசியமே இல்லை. உடம்போட சக்தியை பேச்சுங்கற விஷயத்துல நாம் சரி பாதிக்கு மேல செலவழிக்கறோம். அது அப்படியே சேமிப்பாகும். நாம் நினைப்பதை பார்வையாலேயே பிறருக்கு உணர்த்தலாம். நம்முடைய கட்டளைக்கு எல்லோரும் கீழ்ப்படிஞ்சு நடப்பாங்க.

இந்த 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'யில ஜெயிக்கிறது அவ்வளவு சுலபம் இல்லை. இதுல கொஞ்சம் தடம் புரண்டாலும் சித்த பிரமை ஏற்பட்டுடும். என்னடா ஒரு அஞ்சு வயசுப் பையன்கிட்ட இவ்வளவு பெரிய

விஷயங்களைப் பேசறேனோன்னு நினைக்கறியா?

சிலருக்கு உடம்புக்கு வயசு குறைவா இருக்கும். ஆனா மனசுக்கு வயசு கூடுதலா இருக்கும். ஞான சம்பந்தர் அப்படித்தான். நீயும் ஒரு ஞானசம்பந்தன் ஆகணும் ராஜா. கவலைப்படாதே. தாத்தா இருக்கேன். தாத்தா இப்ப பசி, தூக்கம்னு உணர்ச்சிகள்ல இருந்து விடுதலை பெற்று ஒரு ஆன்ம சொரூபத்துல இருக்கேன். காலம் நேரம் இரண்டும் எனக்குக் கிடையாது. எப்படிங்கறதை எல்லாம் உனக்கு போகப் போக சொல்லித் தரேன்..'

எஃப்.எம்-ல் கேட்ட குரல் உஷாவைக் கட்டிப் போட்டிருந்தது. செல்போனை நிமிர்த்தி வைக்கக் கூடத் தோன்றாமல் அந்தப் பேச்சில் அப்படியே ஒன்றிப் போய் விட்டாள். கொஞ்சம் குரல் ஒலி தேய்வது போலத் தோன்றவே எடுத்துப் பார்த்தாள். இப்போது சப்தமே வரவில்லை. திடீரென்று 'ஆல் இந்தியா ரேடியோ சென்னை வானொலி நிலையம்' என்று அறிவிப்பாளர் குரலும் கேட்டது.

அய்யோ..? அப்படியானால் இப்பொழுது இதுவரை கேட்ட குரல் யாருடையது..? காதில் விழுந்தது ஏதாவது ஒளிபரப்பு நிகழ்ச்சியா.. இல்லை, யாராவது இங்கே இருந்து பேசிய பேச்சா?

குழப்பமாக இருந்தது. முகத்தைப் பூசித் துடைத்துக் கொண்டாள். விளக்கொளியைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தாள். தீப ஜோதி கர்ப்ப மாத்து இலை விளக்கு என்று காதில் ஒலித்த குரல் ஞாபகத்தில் மீண்டும் பாவியது.

'ஒருவேளை அதுபோன்ற ஒரு இலை விளக்குதான் உள்ளேயும் எரிந்து கொண்டிருக்கிறதோ? 48 நாள் தொடர்ந்து எரியும் என்றதே எஃப்.எம்-ல் கேட்ட குரல்.. அதுதான் இந்த வீட்டு விளக்கும் அணையாமல் எரிந்தபடி உள்ளதோ?

அது எப்படி இங்கே இந்த விளக்கு வந்தது? எனக்குத் தெரிய வேண்டும் என்றே யாரோ சொன்ன தகவல்களா இவை.. இல்லை இவை தற்செயலான ஒலிபரப்பா?'

உஷாவைக் குழப்பம் கழுகு அலகு போலக் கொத்திக் கிழித்தது. 'அவினாஷ்.. அவினாஷ்.. எங்க ராஜா போயிட்டே? தாத்தா வந்திருக்கேன் பார்' என்று காதில் விழுந்ததே.. அப்படியானால் இந்த வீட்டைப் பற்றி நவநீதன் சொன்னதெல்லாம் உண்மையா? அவர் மகன்தானே அவினாஷ். அவனைத் தேடி தாத்தா வந்திருக்கிறேன் என்றால் வந்தது நடராஜ பிள்ளையா?

அவர் குரல் எப்படி எஃப்.எம்-ல் கேட்டது? என் காதில் விழுந்ததில் எது






நிஜம், எது பொய்? தெய்வமே..'

உஷா புழுங்கினாள். நிறைய வியர்த்தாள். சட்டென்று கரண்ட் வந்தது. நைட் லேம்ப்பும் எரிந்தது. ஃபேன் விர்ரென்று ஓடி மெல்லிய சப்தம் கேட்க ஆரம்பித்தது. எழுந்து விளக்கைப் போட்டாள். செல்போனை எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்தாள். ட்யூன் செய்து எந்த அலைவரிசையிலாவது அந்தக் குரல் மீண்டும் கேட்கிறதா என்று பார்த்தாள்.

கொர்ர்ர்.. டுர்ர்.. என்று சப்தம்தான் காதைக் கீறியது. சில இடங்களில் பாடல்கள்! குறிப்பாக 'வீடு வரை உறவு.. வீதி வரை மனைவி' பாடல் அந்தச் சூழலுக்கு வலு சேர்க்கிற மாதிரி ஒலித்து ஆளை மிரட்டியது.

அதற்கு மேல் அங்கு தொடர்ந்து படுக்க அவளுக்கு தைரியமில்லை. அப்படியே கதவைப் பூட்டிக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தாள்.

"டொக்.. டொக்!"

கதவைத் திறந்தார் தியாகராஜன்.

எதிரே தெரிந்த உஷாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

"என்னம்மா.. ஏன் பாதியில வந்துட்டே..?"

"அங்க இருக்க பயமா இருக்குப்பா.."

"என்னம்மா சொல்றே?"

"எஃப்.எம்ல நவநீதன் சார் அப்பா குரல் கேட்குது. அணையாம விளக்கு ஒண்ணு எரிஞ்சுக்கிட்டு இருக்குது. பயமா இருக்குப்பா."

அவள் சொன்னது உள்ளே நிஷா காதிலும் ஒலித்தது போல் உள்ளிருந்து சிரிப்புச் சப்தம் கேட்டது.

"சரி சரி உள்ற வா.. அது எப்படி அவர் அப்பா குரல் எஃப்.எம்ல கேட்கும். என்னென்னவோ சொல்றியேம்மா நீ.."

அவள் உள்ளே வரவும் கதவைச் சாத்தியபடியே கேட்டார் தியாகராஜன்.

"வேண்டாம்ப்பா.. என்னை எதுவும் கேக்காதீங்கப்பா. இங்க ஒரு வித்

ஞானி ஒருத்தி இருக்கா. அப்புறம் அவ தன் பங்குக்கு எதையாவது சொல்ல ஆரம்பிச்சுடுவா. ஆளை விடுங்க."

உஷா வேகமான பதிலோடு பெட்ரூமில் உள்ள அவளது படுக்கையில் போய் விழுந்தாள். தியாகராஜனும் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கச் சென்றார்.

படுக்கையிலும் உஷாவின் காதில் எஃப்.எம் குரலின் எதிரொலிகள்.

'இந்த விளக்கொளி ரொம்ப விசேஷமானது. இதை ஊன்றிப் பார்த்து செய்யற பயிற்சி ஒண்ணு இருக்கு. அதுக்கு 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'னு பேர். அதை எல்லாம் நான் உனக்கு போகப் போகச் சொல்லித் தருவேன். மனசுல வைராக்யம் உள்ளவங்க இந்தப் பயிற்சியை பத்தே நாள்ல முடிச்சுடலாம். பூர்வ ஜென்ம கர்மமும் இடம் தரணும். என்னா பெரிய தவப் பயிற்சி இது. பல வருஷம் செய்தாலும் சித்திக்கிறது ரொம்ப கஷ்டம்!'

உஷா புரண்டு புரண்டு படுத்தாள். தொடர்ந்து காதில் ஒலித்தபடி இருந்தது அந்தக் குரல்.

'ஆக்ஞா ஒளிப் பயிற்சியில தேறிட்டா கண்கள் முதல்ல காந்தலா எரிஞ்சு, பின் நீலோற்பல மலர் போல குளிர்ந்துடும். அதன் பின் யாரோடையும் பேசி எதையும் புரிய வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

பார்வை ஒண்ணே போதும்.'

தொடர்ந்து காதுகளில் மோதியபடி இருந்தது அந்தக் குரலின் கருத்துக்கள்.

அப்படியே ஒரு கட்டத்தில் தன்னை மறந்து தூங்கிப் போனாள்!

## ⏮ 6 ⏭

'புராணங்களில், இதிகாசங்களில், அசரீரி சப்தம் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கலாம். வானில் இருந்து ஒரு குரல் ஒலிக்கும். அதற்கேற்ப புராண புருஷர்கள் செயல்படுவார்கள். குழந்தை கண்ணனைக் கூடையில் சுமந்து கொண்டு வசுதேவர் நடக்கையில் அசரீரிதான் அவரைப் பல இடங்களில் 'கைட்' செய்தது.

அசரீரியை கடவுளின் குரல் என்றும் தேவர்களின் குரல் என்றும் கூறுவார்கள். அசரீரி கேட்டதெல்லாம் துவாபர, திரேத யுகங்களில்.. கலி யுகத்தில் அசரீரி கிடையாதா, ஏன் கிடையாது போன்ற கேள்விகளுக்கு அவ்வளவு சுலபத்தில் பதில் கூறி விட முடியும். கலியுகத்தில் மட்டும் மனிதர் பாவ புண்ணியத் தாக்கங்களுக்கு உட்பட்டு, அதில் கடைத்தேறிதான் மோட்சம் அடைய முடியும்.




கலியுகத்தில் கடவுளால் கொடுக்கப்பட்ட புத்தியே, கடவுளை இல்லை என்று கூறி கர்வம் கொள்ளும். இது ஒரு வகையில் வரம் கொடுத்த சிவனின் தலையிலேயே கை வைத்துப் பார்க்கும் முயற்சிதான். ஆனால், இதனால் கடவுளுக்கு அணுவளவு பாதகமும் நேரப் போவதில்லை. புத்தி கடவுளைக் கண்டு தெளிய நாளாகும். அவ்வளவுதான். இருப்பினும் திரேத, துவாபர யுகத்து சங்கதிகள் கலியுகத்திலும் இருக்கின்றன.

அதில் ஒன்றான அசரீரி இன்று வேறு வடிவில் வெளிப்பட்டபடி உள்ளது. பகவான் ரமணர் நாடோடியாய் அலைந்தபோது, திருவண்ணாமலைக்கு அவரைப் போகச் சொன்னது இப்படிப்பட்ட அசரீரிகள்தான்.

ஒரு ரயில்வே ஸ்டேஷனில் நிச்சலனத்தோடு படுத்துக் கிடந்தவர் 'எங்கே போவது.. இனி தனது நாட்கள் எங்கு கழியும்?' என்கிற கேள்வியில் இருந்தபோது, அருகில் இரண்டு பேர் தங்களுக்குள் வேறு விஷயத்துக்காகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அதில் ஒருவர் 'திருவண்ணாமலைக்குப் போ.. அங்கதான் இனி உனக்கு காலம்' என்கிறார்.

'அங்கே என்னை ஆதரிக்க யார் இருக்கா?' என்று எதிர் கேள்வி கேட்கிறார் அடுத்தவர். 'மலையைச் சுத்தி ஆயிரம் பேர் இருக்கா.. என்ன நீ அப்படிச் சொல்லிட்டே..?' என்கிறார் முதலாமவர்.

அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டது ரமணரை புரிக்க வைத்தது. புறப்பட்டு விட்டார். நமக்கும் இப்படி பல சந்தர்ப்பங்களில் பதில்கள் கிடைத்திருக்கும். அதை நமக்கான பதில் என்று உணர்வதில்தான் இருக்கிறது சூட்சமம்.. சரி, இது எப்படி நிகழ்கிறது.. யார் குரலிலோ ஏன் நமக்கான வழிகள் தெரிய வேண்டும்? அந்தக் கடவுள் ஏன் நேராக நம்மிடம் கூறக் கூடாது என்றெல்லாம் கேள்விகள் கிளை விடும்.

கடவுள் தோன்றாமல் இருக்கும்போதே, இந்த மண்ணில் தோன்றுவது ஆம்

கடவுள் நம்பிக்கையாளர்களும் 10 சதமே நாத்திகம் பேசுபவர்களும் உள்ளனர் என்கின்றனர். அந்தக் கடவுள் நேரில் தோன்றி விட்டால்.. அவ்வளவுதான். நல்ல கற்பனைத் திறன் உடையவர்கள், கடவுள் நேரில் தோன்றினால் என்னாகும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஒன்று நிச்சயம் நிகழும்.

உலகம் இயங்குவது எல்லா வகையிலும் நின்று விடும்.'

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

ஐந்து மணி. அலாரம் அலறியது.

கனகம் எழுந்திருந்து உஷாவை எழுப்பி விட்டாள்.

நிஷா அப்பொழுதுதான் உறக்கத்தின் உச்சாணிக் கொம்பில் இருந்தாள்.

உஷாவும் எழுந்திருந்து பாத்ரூம் போய் விட்டு ஈர முகத்துடன் வந்தாள்.

வாசலில் தண்ணீர் தெளிக்கும் சப்தம்!

எட்டிப் பார்த்தாள். அத்தை கனகமே அந்த வேலையில் இறங்கி விட்டிருந்தாள். உடனே வாசலுக்கு ஓடினாள்.

"அத்தை.. இப்படிக் கொடுங்க."

"இல்ல.. நீ போ.."

"அட கொடுங்கன்னா.."

"நீ போடி.. இனி இந்த மாதிரி வேலையைப் பத்தியெல்லாம் யோசிச்சுக் கூடப் பார்க்காதே. அமெரிக்கா போகப் போறவளுக்கு எதுக்கு வாசலும் கோலமும்.."

அத்தை சொன்னது ஐஸ் கட்டியாய் ஜில்லிட்டது.

தியாகராஜனும் எழுந்து வந்து அதைக் கேட்டு சிரித்தார்.



**நண்பர்:** என்ன சார்.. சட்டைப் பையில கரப்பான் பூச்சியை வச்சிருக்கீங்க?

**வடிவேலு:** என் பெஞ்சாதி அதுக்கு மட்டும்தான சார் பயப்படுறா!

- ப.ராமகிருஷ்ணன்,
காயக்காடு.



"என்ன தியாகு.. நான் சொன்னது சரிதானே?"

"தப்புக்கா. அமெரிக்கால கோலம் போடக் கூடாதா என்ன?"

"சிரிப்பாங்க.."

"ஆமாங்க்கா.. ரசிச்சு சிரிப்பாங்க. எவ்வளவு பெரிய கலை வடிவம் இது. இதை இந்தியப் பெண்கள் ரொம்ப சாதாரணமா அதே சமயம் தினம் தினம் செய்யறாங்களேனு நினைச்சு ரசிச்சு சிரிப்பாங்க."

"என்னடா.. காலங்காத்தால உபதேசமா.. அதுவும் என்கிட்டயேவா?"

"அப்படி இல்லக்கா.. நம்மகிட்ட எவ்வளவோ நல்ல விஷயங்கள் இருக்கு. அதுல இதுவும் ஒண்ணு. குறிப்பா பெண்கள் காலைல 5 மணிக்கே எழுந்திருக்கறதால சொல்ல முடியாத அளவு நன்மைகள் ஏற்படுதாம்.."

"யாருக்கு.. உங்களை மாதிரி ஆம்பளைங்களுக்கா?"

"அட நீ ஒண்ணு.. காலைல 5க்கும் 6க்கும் இடைப்பட்ட பிரம்ம முகூர்த்த நேரத்துல, காத்துல பல அமிர்த வாயுக்கள் இருக்காம். அதைக் குனிஞ்சு வளைஞ்சு, யோகாசனம் பண்ற மாதிரியான விஷயத்தோட செய்யும்போது ஹார்ட், நுரையீரல்லாம் புத்துணர்ச்சி அடையுதாம். ரத்தம் சுத்தமாகுதாம். புத்தியிலயும் ஒரு பிரகாசம் அதனால ஏற்படுதாம். சுருக்கமா சொல்லப் போனா, கோலம் போட்றது மாதிரி ஒரு எளிய, இனிய யோகாசனமே இல்லேங்கறதுதான் உண்மையாம்!"

"உனக்கு இதை யார் சொன்னது?"

"யார்.. எல்லாம் நம்ம நவநீதனோட அப்பா நடராஜ பிள்ளைதான். யோகாசனம் அது இதுன்னுதான் அவர் ஏகப்பட்ட ஆராய்ச்சிகள் பண்ணினவர் ஆச்சே?"

"அப்ப ஆம்பளைங்கள கோலம் போடச் சொல்லலாமே..? ஏன் பெண்களையே செய்யச் சொல்றீங்க?"

கனகத்துக்கும் மடக்கத் தெரிந்தது. உஷா கேட்டபடி நின்று கொண்டிருந்தாள். தரையில் இருந்த புள்ளிகள், கனகத்தின் கைகளால் சதுரமாய், செவ்வகமாய், முக்கோணமாய் உருவாகி, ஒரு அழகிய கலை வடிவம் தோன்றியபடி இருந்தது.

"ஆம்பளையும் செய்யலாம்க்கா.. தப்பு இல்லை. ஆனா அவன் உடம்பு வாகுக்கு இது ரொம்ப சின்ன விஷயம். நான் கேட்டேனே..! பதிலுக்கு அவர் என்னைப் பார்த்து 'எதுக்கு இப்படி இந்த விஷயத்தை சமப்படுத்தப் பாக்கறே..? பள்ளமா இருக்குனு கிணத்தைப் போய் மூடினா தண்ணிக்கு எங்கடா போவே?'னு என்னைத் திருப்பிக் கேட்டாரே.."

"புரியலைடா.. அதுக்கு அர்த்தம் என்ன?"

"அவங்கவங்க உடம்பு வாகுக்கு ஏத்ததை அவங்கவங்க செய்யணும். நீ செய்யற எல்லாம் நானும் செய்வேன்னு இறங்கினா விபரீதம்தான்ங்கறதை அவர் அப்படிச் சொல்றாரு.. அதோட இந்த மாதிரி விஷயத்துல உயர்வும் தாழ்வும் கிடையாதாம். அழகா இன்னொரு பதிலும் சொன்னாரு.."

"என்ன?"

"தலைகீழா நின்னாலும் ஒரு ஆண், பிள்ளை பெத்துக்க முடியாது. மாட்டேன்னாலும் கருப்பை இல்லாம பெண்ணும் பெத்துக்கப் போறதில்லை. இது இயற்கை. இதைப் புரிஞ்சுக்கணும். ஆணை விட பெண்ணுக்கு ஆரோக்யம் ரொம்ப முக்கியம். ஏன்னா, அவதான் உயிர்களை உலகுக்குக் கொடுக்கறவ. அவளே சொத்தையா இருந்தா அவ கொடுக்கற உயிர் எப்படி இருக்கும்? ஆசையாலதான் சிகரெட், பீடி, தண்ணி, பொண்ணுனு ஆண் சமூகம் தப்பு செய்யும்போது பெரிசா தெரியாத விஷயம், பெண் செய்யும்போது தெரியுது."

"அப்பா.." கத்தரித்தாள் உஷா.

"என்னடா.. நீ என்ன சொல்லப் போறே?"

"காலங்காத்தால நீங்க இப்படி கத்தி பேசுறத நிஷா மட்டும் கேட்டா உங்களைக் கைமா பண்ணிடுவா. 'இப்பிடி சொல்லியே எங்களை அடிமைகளா வெச்சிருக்கறது உங்க வழக்கமா போச்சு'ன்னு ஆரம்பிச்சுடுவா. ஞாபகம் வெச்சுக்குங்க."

"இல்லிம்மா.. பெட்டியில வெச்சுப் பூட்ற தங்கமும், ஜெயிலுக்குள்ள வெச்சு பூட்டப்படற கைதியும் ஒண்ணா என்ன? ஒண்ணு உள்ள இருந்தாதான் பாதுகாப்பு. அதாவது.. அதுக்கு பாதுகாப்பு! இன்னொண்ணும் உள்ள இருந்தாதான் பாதுகாப்பு.. இந்த பாதுகாப்பு வெளிய இருக்கறவங்களுக்கு.

ஆசையாவும் பாசமாவும் செய்யற செயலை அடிமைத்தனமா அர்த்தம் பண்ணிக்கக் கூடாது.. எல்லாம் புரிஞ்சுக்கறதுலதான் இருக்கு.."

"சரிடா.. போய் அடுத்து ஆக வேண்டியதப் பாரு. மாப்ளை வீட்டுக்காரங்க எப்ப வருவாங்க?"

"பதினோரு மணினு சொன்னாங்க.."


"போ.. போ.. எவ்வளவு வேலை இருக்கு."

தியாகராஜன் திரும்பினார். உஷாவும் அவரை ஒட்டியபடி உள்ளே சென்றாள். அவிழ்ந்த தலைமுடியை அவர் எதிரில் அள்ளி முடிந்து கொண்டபடியே கேட்டாள்.

"அப்பா.. மாப்ளையை நீங்க பாத்தீங்களா?"

"இல்லையேம்மா.. ஆனா போட்டோவுல பாத்தேன்.."





"எனக்குக் காட்டலையேப்பா.."

"அட.. நீ இன்னுமா பாக்கலை? உன் தங்கச்சி பாத்துட்டு நான் காட்டிக்கறேன்னாளே.."

"அவகிட்ட எப்பா கொடுத்தீங்க..?"

"சரி.. சரி.. இப்ப என்ன.. எழுப்பிக் கேட்டு வாங்கித் தரேன்."

தியாகராஜன் நிஷா படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தார். அவளும் ஒரு ரப்பர் வளையம் போல சுருண்டு படுத்திருந்தாள்.

"நிஷாக்குட்டி.. நிஷா.. எய் குரங்கு உன்னைத்தான்.."

"என்ன பெரிய குரங்கு?" நிமிராமல் படுக்கையில் புதைந்த நிலையிலேயே பதில் கேள்வி.

"அடிச்சேன்னா.. எங்க அந்த மாப்ளைப் பையன் போட்டோ..?"

"எதுக்கு?"

"எதுக்கா.. என்ன கேள்வி இது. அதை நீ உஷாகிட்ட காட்டலையா?"

"காட்டலை.. சஸ்பென்ஸாவே இருக்கட்டும்னு விட்டுட்டேன்.."

"எதுடி சஸ்பென்ஸ்..? என் போட்டோவை நீ ஏன்டி வெச்சுருக்கே? அதான் உனக்குன்னு ஒருத்தன் முடிவாயிடிச்சுல்ல?"

உஷா ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள்.

நிஷாவிடமும் தூக்கம் கலைந்தது. உஷாவின் ஆவேசம் அவளை எழுப்பி உட்கார்த்தியது. உஷாவைக் கூர்ந்து பார்த்தாள்.

"என்ன பாக்கறே.. எங்க போட்டோ?"

"இப்ப என்கிட்ட இல்லை.."

"இல்லையா..?"

"ஆமாம்.. கிழிச்சுப் போட்டுட்டேன். இப்ப என்ன பண்ணுவே?"

அவள் கோபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டாள்.

புரிந்து கொண்ட தியாகராஜனும் "நிஷா விளையாடாதே.. காலங்காத்தால உங்கக்காவை அழ விடாதே. எங்க போட்டோ..?" என்று கத்தினார். அதன் பின் நெடு நேரம் வரை படு சஸ்பென்சாய் மாறி மாறிப் பார்த்து விட்டு, தலையணை அடியில் இருந்து போட்டோவை எடுத்து நீட்டினாள்.

"என்னைப் பார்க்க வர்றவர் போட்டோவை நீ எதுக்குடி வெச்சுருந்தே? அதுவும் ரகசியமா தலைகாணிக்கு கீழே..?"

உஷாவிடம் கோபம் அடங்கவில்லை. நிஷாவுக்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

"எனக்குப் பிடிச்சிருந்தது. வெச்சுருந்தேன்.. போதுமா?" பட்டென்று வெடித்தாள்.






தியாகராஜன் கூட குழப்பத்துடன் பார்த்தார்.

"என்னடி சொல்றே.. உனக்குத்தான் ஒரு மாப்ளை பார்த்தாச்சே..?"

இது உஷா..

"அவரை இப்ப எனக்குப் பிடிக்கலை. எனக்கு இவரைத்தான் பிடிச்சிருக்கு. இப்ப என்ன சொல்றே?"

அவள் பதில் கேள்வி தியாகராஜனைத் திக்குமுக்காட வைத்தது.

"அம்மாடி.. என்னம்மா பேசறே நீ? தெரிஞ்சுதான் பேசறியா?"

"ஆமாம்ப்பா.. எனக்கு அந்த மாப்ளையை விட இவர் பெட்டரா தெரியறார். அது மட்டுமில்ல.. ப்ராப்பர்ட்டிலைன்ஸ் இந்த நபர்தான் பிக் ஷாட்."

"அதனால..?"

"பேசாம இவரை எனக்குப் பேசி முடிங்க. அந்த மாப்ளைக்கு சாரி சொல்லிடுங்க.. சொல்லிடுங்க என்ன.. நானே நேத்து நைட் 'சாரி ராஜேஷ்'னு சொல்லிட்டேன்."

"என்ன விளையாட்றியா.. மாப்பிள்ளைங்கள்ளாம் என்ன கத்தரிக்காயா..? வெண்டைக்காயா..? இது பிடிக்கலை அது பிடிக்கலைங்கறதுக்கு.."

தியாகராஜன் கோபத்தின் உச்சத்துக்குப் போக. காபியோடு வந்து நிற்கும் கனகத்துக்கும் நெஞ்சை அடைத்தது.

"என்னடா தியாகு?"

"என்னத்தச் சொல்ல.. இந்தப் பிசாசு திடீர்னு ஒரு குட்டி கலாட்டா பண்றா. இவளுக்கு பார்த்த மாப்ளையை இவளே பிடிக்கலைன்னுட்டாளாம். இன்னிக்கு வரப் போறவன்தான் இவளுக்கு வேணுமாம்.."

"அடக் கடவுளே.. ஏன்டி.. உன் புத்தி ஏன்டி இப்படிப் போகுது. நினைச்சு நினைச்சு மாப்ளைங்கள மாத்த அவங்க என்ன சட்டையா பேண்ட்டாடி..?"

"அத்தை.. எனக்கு என் சௌகர்யம்தான் பெருசு. ஏன் நீ மட்டும்

என்ன? உனக்குப் பிடிக்காதவன கட்டி வெச்சா கட்டிக்குவியா?"

"நாங்கள்ளாம் மணப் பந்தல்லதான்டி மாப்ளை முகத்தையே பாத்தோம்.."

"அதான் இப்ப அந்த ஆள் இல்லாம கல்யாண சமையல் செஞ்சு கஷ்டப்படறே.. நான் அப்படி இல்லை. என் வாழ்க்கைய எப்படி அமைச்சுக்கறதுனு எனக்குத் தெரியும்.."

"நிஷா.. திஸ் ஈஸ் டூ மச்.. ராஜேஷுக்கு என்ன குறை?"

"என்ன நிறை..? உஷாவைப் பெண் பார்க்க வந்துட்டு என்னைப் பார்த்து பல் இளிச்சது எதோட சேர்த்தி?"

"அப்ப எதுக்கு நீ சம்மதிச்சே?"

"சம்மதிக்கிற மாதிரி நடிச்சேன். இந்த மாதிரி ஆட்களை எல்லாம் இப்படித்தான் ட்ரீட் பண்ணனும். சாய்ஸ்ங்கறது ஆணுக்கு மட்டுமே சொந்தமான விஷயம் கிடையாதுப்பா.. அது பெண்ணுக்கும் உரிய விஷயம்."

"இல்லம்மா.. நீ தப்பா சிந்திக்கிறே.. தப்புத் தப்பா நடந்துக்கறே. உஷாவைப் பார்.. எவ்வளவு பெருந்தன்மையா உன் வரைல நடந்துக்கிட்டா.. விட்டுக் கொடுத்தா.."

"ஐ'ம் சாரிப்பா.. நான் நிஷா."

"இடியட்.. சொல்லச் சொல்ல திமிராவா பேசறே."

"இல்லப்பா.. தன்னம்பிக்கையோட பேசறேன்.."

"எது தன்னம்பிக்கை..? இன்னைக்கு வரப் போறவனை நீ அடைய நினைக்கறதா?"

"கவலைப்படாதீங்க. நான் போட்டியே போட மாட்டேன். வரப் போற நபர், தானா அந்த ராஜேஷ் மாதிரியே, 'என்னைத்தான் பிடிச்சிருக்கு'னு சொல்லுவார். அதே சமயம் எனக்கும் பிடிக்கணும். அதுவும் ரொம்ப முக்கியம்."

"அடிப் பாவி.. முடிவே பண்ணிட்டியா?"

"இது என்னோட முடிவு கிடையாது. அரசியல்வாதிகள் பாணில சொன்னா இது காலத்தின் கட்டாயம்."

நிஷா சொல்லி விட்டு பாத்ரூம் நோக்கி நடந்தாள். நடையில் ஒரு தெனாவெட்டு. உஷா அப்படியே உடைந்து போயிருந்தாள். கனகமும் ஸ்தம்பித்திருந்தாள்.

பாவம் தியாகராஜன்.

அவருக்கு, தான் அடுத்து என்ன செய்வது, அதை எப்படிச் செய்வது என்றே தெரியவில்லை.



## ◄◄ 7 ►►

'மனம் என்பது ஒரு மைதானம் மாதிரி. இந்த மைதானத்திற்குள் பலரும் வருவார்கள், போவார்கள். யார் எப்பொழுது வருவார், எப்படி வருவார், என்ன செய்வார் என்று முன்னதாக உணரவே முடியாது. இப்படி வருவோர் போவோரால் மைதானமும் பாதிக்கப்படுவதான் இருக்கும்.

மன மைதானத்தில் வருவோர் போவோர் என்பவர்களே எண்ணங்கள். மைதானம் பாதுகாப்பாக, சுகாதாரமாக இருக்க வேண்டுமானால், வருவோர், போவோருக்கு உத்தரவுகள் இட்டு இப்படித்தான் வர வேண்டும், இப்படித்தான் செல்ல வேண்டும் என்று ஒரு விதியை உருவாக்க வேண்டும்.

அதாவது உள்ளே வரும் எண்ணங்களை மனதானது பிரித்துப் பார்த்து, அனுமதிக்க வேண்டியதை அனுமதித்து, தள்ள வேண்டியதைத் தள்ளத் தெரிய வேண்டும்.

இதைச் சாதாரணமாய் செய்ய முடியாது.

மனவளக் கலைகள் இந்தப் பயிற்சியைத் தருகின்றன. மேல் நாடுகளில் மனத்தையும் எண்ணத்தையும் ரேடியோவோடு ஒப்பு நோக்குகிறார்கள். ரேடியோ ஒலிபரப்பப்படும் அலைகளை உள் வாங்கி வெளியே விட்டு இயங்குவதை அதை மனிதன் இயக்குகிறான். அதேபோன்றுதான் அவன் மனமும்.. மனிதனும் மௌனமாக இருந்து ரேடியோ அலைகளை உள் வாங்கி உணரலாம். ரேடியோ பெட்டியில் ஒரு கருவி செய்வதை அவன் மனமே செய்யலாம். இது இயலும். இதற்கான அமைப்பு நம் உடற்கூறில் உள்ளது. இதன் அடித்தளத்தில்தான் இயங்குகிறது. மெஸ்மரிசமும் ஹிப்னாடிசமும்..

பயிற்சியால் இதை உணர முடியும். நம் உடல் ஒரு மர்மக் கூடம். இதில் எவ்வளவோ சாத்தியக் கூறுகள் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து

**வானவில் ஒரு கார்மேகத்தை ஒளிரச் செய்வது போலவே, நட்பும் நம் வாழ்வுக்கு வண்ணம் தீட்டுகிறது.**



நம்மை மேம்படுத்திக் கொள்ள நாம் முனைவதில்லை.

காடுகளில் சித்தர்களும், இன்னும் சிலரும் மர்மக் கூடமான உடம்பைப் புரிந்து வைத்திருப்பவர்கள். இன்று உள்ளங்கையில் அடங்கி விட்ட ஒரு செல்ஃபோன் மூலமாக வானில் இன்ஸாட் உதவியுடன் பேசும் நாம், இன்னும் ஒரு சில நூற்றாண்டுகளில் இந்தக் கருவிகளின் துணை இன்றியே பேசப் போகிறோம். இது நடக்கப் போகிறது.

ஒரு ஆச்சர்யம்.. இப்படிப் பேசிக் கொண்ட ஒரு நிலை ராமாயணம், மகாபாரதத்தில் நிறையவே உள்ளது. அதாவது அடுத்து நாம் அடைய உள்ள விந்தையான உச்சியை நம் முன்னோர்கள் முன்பே அடைந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்!

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

உஷாவுக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. கலகலவென்று தொடங்கிய காலைப் பொழுது, கண்ணாடி தரையில் விழுந்து நொறுங்கிய மாதிரி உடைந்து சிதறி விட்டது.

தியாகராஜன் பொம்மையாட்டம் உட்கார்ந்திருக்க, கனகம் கேட்டாள்.

"எம்ப்பா.. அடுத்து என்ன பண்ணப் போறே?"

"எனக்கு ஒண்ணும் புரியல்லக்கா."

"இப்படி சொன்னா எப்படி..? நேரம் ஆகிக்கிட்டு இருக்குல்ல.."

"என்னை என்ன பண்ணச் சொல்றே.. ஒரு ராட்சஸி எனக்கு மகளா பொறந்துட்டதால நான் கிடந்து தவிக்க வேண்டியிருக்கு."

"அவ கிடக்கறா.. அவளை ஒண்ணு ரூம்ல போட்டுப் பூட்டு. இல்ல எங்கையாவது வெளியே அனுப்பு.."

"என்னக்கா பேசறே.. இதுக்கெல்லாம் கட்டுப்பட்றவளா அவ?"

"அதுக்காக.. இவளுக்கு பயந்துக்கிட்டு இப்படியே உக்காந்திருக்கப் போறியா?"

"இப்போதைக்கு எனக்கு ஒரே வழிதான்.. வரப் போற மாப்பிள்ளையை வர வேண்டாம்னு சொல்றதுதான் அது."

அவசரப்படாதே. ஒரு தடவை ஒரு நல்ல காரியம் தள்ளிப் போனா அப்புறம் மூணு தடவை தள்ளிப் போகும்."

"நூறு தடவை தள்ளிப் போகட்டும். என்னை என்ன பண்ணச் சொல்றே.. இந்த ராட்சஸியை வெச்சுக்கிட்டு உஷாவுக்கு என்னால நல்லவிதமான மாப்ள பார்க்கவே முடியாது. ஒரு தடவை தப்பு நடந்தது. அதையும் எப்படியோ சரி செய்தேன். இப்ப இன்னொரு தடவைன்னா.. ஆமாம் எங்க உஷா?"

"அவ உன் ஃப்ரெண்டு நவநீதன் வீடு காலியாதானே இருக்கு. அங்கே



போயிட்டா.."

"அங்க இருந்து ராத்திரி பயந்து போய்த் திரும்பி வந்தாளே.."

"அது ராத்திரி.. இப்ப பகலாச்சே.. தைரியம் வந்துருக்கும்."

"சரிக்கா.. நான் மாப்ளை வீட்டுக்குத் தகவல் சொல்லிர்றேன்.." தன் செல்போனை எடுத்தபடி, அவர் வாசல் பக்கம் செல்ல.. கனகம் வேறு வழி தெரியாமல் வெறித்தாள்.

**நண்பனுடன் பகிர்ந்து கொள்கையில், துக்கம் பாதியாகிறது, மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.**



அப்படியே நிஷா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று ஒரு பார்வை பார்த்தாள். அவள் திரும்பவும் சென்று படுக்கையில் விழுந்திருந்தாள்.

கனகம் தலையில் அடித்துக் கொண்டாள்.

குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தாள் உஷா.

எதிரே அவள் ஆச்சரியத்துடன் பார்த்த அந்த எண்ணெயில்லாமல் எரியும் ஜோதி கற்ப விருட்ச மரத்தின் இலையால் எரியும் விளக்கு. அருகில் செல்போன்! கண்களில் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது.

உடன் பிறந்தவளே ஒரு போட்டிக்காரியாகி முட்டி மோதுவது, நெஞ்சைப் பிசைந்து கொண்டிருந்தது. அவள் இப்படி நடக்க வேண்டிய அவசியமேயில்லை. எதனால் அவளுக்கு இவ்வளவு காழ்ப்பு என்பதும் தெரியவில்லை.

"உஷா.." குரல் கேட்டது. திரும்பினாள்.

கனகம்தான் வந்தாள். அருகில் அமர்ந்தாள்.

"அழுவுறியா.. வயசுப் பொண்ணு அழுவலாமா?"

தலையைத் தடவி ஆறுதலாய்ப் பேசினாள்.

"இப்ப எதுக்கு இங்கே வந்தே?" என்றாள் உஷா அழுகையினூடே!

"காரணமாகத்தான்.. நீ ஆ ஊன்னா இங்க வந்துட்றியேம்மா. எதையும் எதிர்த்து நின்னு ஜெயிக்க வேண்டாமா?"

"எனக்கு வெறுத்துப் போச்சு அத்தை. எதிர்த்து நிக்க நான் என்ன

அவ எதிரியா.. இல்ல அவதான் எனக்கு எதிரியா?"

"பைத்தியம்.. நீ எதிரியா நினைக்காம இருக்கலாம். ஆனா அவ நினைக்கறாளே. அப்ப நீ சுதாரிக்க வேணும்."

"சரி.. வந்த விஷயத்தைச் சொல்."

"உன் அப்பா மாப்ளையை வர வேண்டாம்னு சொல்லிட்டான். அந்த ராட்சஸி நினைச்சாலும் ஒண்ணும் பண்ண முடியாது."

"அப்ப இன்னிக்கு யாரும் வரப் போறதில்ல..?"

"ஆமா.. இன்னொரு நாள்ல ரகசியமா அவ இல்லாதப்ப ஏற்பாடு செய்வான்னு நினைக்கறேன்."

"நான் என்ன விபச்சாரியா.. என்னைப் பார்க்க எதுக்கு அவர் ரகசியமா வரணும். உனக்கே இதைச் சொல்ல சங்கடமா இல்லை?"

உஷாவின் மடக்கலில் கனகமே திணறித்தான் போனாள்.

"சரி என்னதான் பண்ணலாம்ங்கறே?"

"எனக்குக் கல்யாணமே வேண்டாம். அவளுக்கு முதல்ல பண்ணுங்க."

"அதைத்தான் உங்கப்பன் செய்தானே! ஆனா அவனையே வேண்டாம்னுட்டாளே இந்த ராட்சஸி."

"சரி.. இன்னிக்கு வர்ற மாப்பிள்ளையைப் பிடிச்சிருந்தா பண்ணி வையுங்க."

"என்னம்மா நீ.. அவ விருப்பத்துக்கு ஆட உங்கப்பா என்ன அவளோட அடிமையா?"

"சரி.. எக்கேடோ கெட்டுப் போங்க.. இப்ப என்னை விடு. நான் கொஞ்சம் தனியா இருக்கேன்."

"சரி.. நான் இப்ப கிளம்பறேன். பிறகு வந்து பேசறேன். ஒரு பொண்ணுக்கு கோணல் புத்தியா போய்ட்டதால எவ்வளவு பேருக்கு சிக்கல்.."

புலம்பியபடியே விலகிச் சென்றாள்.

உஷா திரும்பவும் குத்துக் காலிட்டு உட்காரப் போனாள். என்ன நினைத்தாளோ..

எழுந்து சென்று கதவைத் தாழிட்டு விட்டு வந்தாள். அடக்க முடியாதபடி அழுகை வந்து கொண்டே இருந்தது.

பெண்களில் இரு ஜாதியினர்தான் இருக்கின்றனர். ஒன்று முடங்கி அழுபவர்கள்.. இல்லாவிட்டால் சீறிப் பாய்பவர்கள். நடுவாந்திரத்தில் நிதானத்தில் இருந்தால் எப்படி இருக்கும்?

அழுது கொண்டே இருந்த உஷாவுக்குள் சட்டென்று ஒரு பொறி.

'நான் உயிரோடு இருப்பதால்தானே இவ்வளவு பிரச்னைகளும்..?'






வரக் கூடாத எண்ணம் அவளுக்குள் வந்து விட்டது. சுற்றுமுற்றும் ஒரு பார்வை பார்த்தாள். ஃபேனைப் பூட்டும் கொக்கியும் பிளக் பாயின்ட்டும் அருகருகே தெரிந்தன. சற்றுத் தள்ளி ஒரு உடைந்த நாற்காலி கிடந்தது.

சில நொடிகள் மாறி மாறிப் பார்த்தவள் நாற்காலியை எடுத்து வந்து போட்டு அதற்கு ஒரு காலி டப்பாவை அண்டக் கொடுத்து நிறுத்தி விட்டு, மேல் ஏறினாள்.

சேலையை நின்றபடி அவிழ்த்தவள், ஒரு முனையை ஃபேன் கொக்கியில் நுழைத்தாள். மறு முனையை ஒருசேர இழுத்து ஒன்றாகக் கட்டியவள், கழுத்துக்கு அருகே வைத்துப் பார்த்து, அளவைச் சரி செய்து கொண்டாள். ஒரு வளையத்தை சுருக்கு முடிச்சுப் போட்டு உருவாக்கி கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டியதுதான். அதன்பின், முப்பது நொடிகளோ.. இல்லை ஒரு நிமிடமோ.. அதன்பின் உஷா என்று ஒருத்தி இந்த பூமியில் வாழ்ந்தாள் என்றுதான் ஊர் சொல்லும். இருக்கிறாள் என்று சொல்லாது.

என்ன இருந்தாலும் சாகப் போகிறோம் எனும்பொழுது, கடைசி கடைசியா என்று சில எண்ணங்கள் அவளுக்குள் எழும்பி அவளைச் சற்று தாமதப்படுத்தின. உடம்பிலும் வெடவெடவென்று நடுக்கம்.

அதில் அவள் நின்று கொண்டிருந்த நாற்காலியும் சேர்ந்து நடுங்கியது. அவளையும் கீழே தள்ளி விட்டது. விழுந்த வேகத்தில் கையோ காலோ பட்டு தரையில் இருந்த மொபைல் போன் எப்படியோ 'ஆன்' ஆனது. தொடக்கத்தில் 'சர்புர்' என்று இரைச்சலிட்டாலும், பின் அது இதமாகப் பேசத் தொடங்கியது.

'ஆத்ம ஹத்தி பெரிய பாவம்.. அதுவும் நான் இருக்கும் இடத்தில் ஒரு பெண் தூக்கில் தொங்க நினைப்பது மிக மிகத் தவறு.

உன் மன உளைச்சலை நான் அறிவேன்.

கவலையே படாதே. இன்றே உனக்கு மாப்பிள்ளை வருவான். வருபவன்

மாப்பிள்ளை மட்டுமல்ல, மருந்தும்கூட! மற்றதைப் பொறுத்திருந்து பார்.. உன் எதிரில் எரிந்தபடி இருக்கும் விளக்கைப் பார். மனதை அதில் குவித்து தியானம் செய். படபடப்பு அடங்கும். மனோ சக்தியும் பெருகும்.

'டொர்ர்.. கொர்ர்.. டப்.. டுப்.. கொய்ங்ங்ங்..'

குரல் முற்றுப் பெற்று திரும்பவும் இரைச்சல் சப்தம் காதில் மோதியது. ஒரு கணம் உஷா ஸ்தம்பித்தாள். காதில் விழுந்தது எஃப்.எம் ஒலிபரப்பா.. இல்லை தனக்கான பிரத்யேகக் குரலா? இது எப்படி சாத்யம்?

மீண்டும் குழப்பத்தின் ஆக்ரமிப்பு. சாக வேண்டிய எண்ணம் பின்னுக்குச் சென்றது. பார்வை தானாக தீபத்தை நோக்கித்தான் போய் நின்றது.

அது அணையாமல் ஒளிர்ந்து கொண்டிருந்தது.. உஷாவின் கண்ணும் மனமும்கூட அதில்தான் ஒடுங்கின!

## |◀◀ 8 ▶▶|

**கை**வல்யம் என்பது ஒருவித முக்தி அடைந்த நிலை. மனிதப் பிறப்பில் உடம்பைப் புரிந்து கொண்டு பக்தி செய்து, பின் உடம்பை ஜெயித்து, அந்த உடம்பை உதிர்த்த பின்னும் ஆன்மாவாய், சூட்சும தேகத்துடன் நடமாடுபவர்கள் பலர் இந்த மண்ணில் உண்டு.

குறிப்பாக, யோகியர்கள், சித்த புருஷர்களை எரித்து சாம்பலாக்காமல் மண்ணில் புதைக்கக் காரணமே, அவர்கள் சூட்சும தேகத்துடன் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்ட வேண்டும் என்பதற்காகத்தான்.

அப்படி வாழும் யோகிகள் இடத்துக்கும் ஆளுக்கும் தகுந்தாற்போல அதிசயங்கள் செய்வார்கள். இவர்களே நமக்கு அசரீரியாய் பிறர் குரல் மூலம் வழிகாட்டுவார்கள். இந்தக் குரல் அலைகள் ரேடியோ அலைகளைப் போலவே வானில் ஊடுருவி, ரேடியோவில் வெளிப்பட வல்லது. இதைப் பலரும் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இதை ஏதோ ஒரு நிகழ்ச்சியின் ஒலிபரப்பாகவே கருதுவர்.

.... ☆ ☆ ☆ ☆ ☆ ....

**'பாம்** பாம்..!'

கார் ஹார்ன் சப்தம் கேட்டு வெளியில் பார்த்தார் தியாகராஜன். படகுக் கார் ஒன்று தேங்கி நிற்க, அதிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தனர் சிலர்.

'சரி, நமக்கு இனி இங்கென்ன வேலை' என்று கிளம்பப் பார்த்த கனகமும், ஒரு தோல் பையுடன் புறப்பட்டு விட்ட நிஷாவும் கூட, வந்து நிற்கும் காரைப் பார்த்து விதிர்த்துப் போக, தியாகராஜன் வேகமானார்.



வந்திருப்பது பொள்ளாச்சி மாப்பிள்ளை,

ராம்குமாரும் அவன் அப்பா கைலாசமும்!

'வர வேண்டாம்.. இப்பொழுது பெண்ணுக்கு சற்று உடல் நிலை சரியில்லை' என்று தகவல் தந்தும் வந்திருக்கிறார்களே?!'

கேள்வி ஒருபுறம்.. ஆச்சரியம் மறுபுறம். அத்துடன் உதட்டில் அழைப்பு!

"வாங்க.. வாங்க.."

அவர்களும் வந்தனர், உள்ளே நுழையாமல் வெளியே நின்றனர்!

"உள்ற வாங்க.." தியாகராஜன் மீண்டும் அழைத்தார்.




"மன்னிக்கணும்.. நாங்க இப்ப உங்க வீட்டுக்கு வரலை.."

பையனின் அப்பா கைலாசம் பேசினார்,

"அப்படின்னா?"

"நம்ம யோகி நடராஜபிள்ளை சாமி வீடு இந்த அபார்ட்மெண்ட்லதானே இருக்கு?"

"ஆமா.. அதுக்கென்ன?"

"அவர் வீட்டு சாவிகூட உங்ககிட்ட இருக்கறதா அவர் மகன் நவநீதன் சொன்னார்.."

"ஆமாம். இப்படி வெளியவே நின்னு பேசினா எப்படி? உள்ற வாங்க.."

"வரோம். பொண்ணு பாக்க ஒரு நாள் வரத்தானே போறோம். இப்ப அவர் வீட்டுக்குப் போய் கொஞ்ச நேரம் தியானம் செய்யணும்னு என் மகன் ஆசைப்பட்டான். அதான்.. சாவியைத் தர்றீங்களா?"

தியாகராஜனுக்கு நெற்றி குறுகுறுத்தது. நிஷா அவ்வளவையும் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அமெரிக்க மாப்பிள்ளை இங்கிருக்கும் வீட்டுக்கு வந்து தியானம் செய்வதா..?' அவளுக்குள் ஆச்சரியக் குறுகுறுப்பு. அதே கேள்வியோடு

சாவியை எடுக்கப் போன தியாகராஜன் அங்கே உஷா இருப்பது தெரிந்து திரும்பி வந்து "அங்க.. அந்த வீட்லதான் என் மகள் உஷா இருக்கா.. வீடு திறந்துதான் இருக்கு" என்றார்.

"கொஞ்சம் வந்து காட்ட முடியுமா?"

கைலாசம் இணக்கமாகக் கேட்டார்.

"நிச்சயமா.. ஆமா காலியா இருக்கற வீட்டுல தியானம் பண்ணணும்ங்கறீங்களே.. எனக்கு ஒன்னும் புரியலை.." நடந்தபடியே கேட்டார்.

"அது வந்துங்க தியாகராஜன்.. என் பையன் அமெரிக்காவுல இருந்தாலும் தியானம், யோகா இதுல எல்லாம் ரொம்ப ஈடுபாடு உள்ள பையன்.. நம்ம நடராஜ பிள்ளை எழுதிய யோகா புத்தகங்களைப் பார்த்துருக்கான். அவனுக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சு. அவரையே ஆத்ம குருவா நினைச்சு பயிற்சி எடுத்திருக்கான். அதுல குறிப்பா 'ஆக்ஞா ஒளிப் பயிற்சி'னு ஒண்ணு. அது இவனுக்கு ரொம்பவே கை வந்துருக்கு. அங்க மனோதத்துவ டாக்டராத்தானே இருக்கான். இந்த ஆக்ஞா ஒளிப் பயிற்சி இவனை அங்க இருக்கற டாக்டர்களிலே நம்பர் ஒன் ஆக்கியிருக்கு.. அதான். இந்தியா வந்தவன் யோகி நடராஜ பிள்ளையைப் பார்க்க ஏலகிரி மலைக்குப் போனான்.

ஆனா.. இவனுக்கு அதிர்ஷ்டமில்லை.

அதுக்குள்ற அவர் சமாதியாயிட்டாராமுல்ல?"

கைலாசம் சகஜமாக விளக்கியபடி நடந்து வந்தார்.



**தோழி:** உன் கணவர் தன்னோட கவுரவத்தை விட்டுக் கொடுக்க மாட்டாரா.. எப்படி?

**வடிவேலுவின் மனைவி:** 'துணியெல்லாம் நல்லா துவைச்சுப் போடு'னு வெளியில எல்லாருக்கும் கேக்கிற மாதிரி சத்தமா சொல்லிட்டுத்தான், என் சேலைகளை எடுத்துக்கிட்டு பாத்ரூம்ல நுழைவார்னா பார்த்துக்கயேன்!

- ப.ராமகிருஷ்ணன், காயக்காடு.



"அது சரி.. இங்க வீட்டுக்கு..?" திரும்ப நினைவூட்டினார்.

"இந்த விஷயத்தை மட்டும் இவன்கிட்டயே கேட்டுக்குங்க.." அவர் விலகி அவனுக்கு வழிவிட்டார்.

எளிய பைஜாமா குர்தாவில் ஒரு வட நாட்டு சேட் இளைஞனைப் போலத் தெரிந்த ராம்குமார் தலையைக் கோதிக் கொண்டே.. "அங்கிள்.. நான் சொல்றதக் கேட்டு நீங்க என்னைப் பார்த்து சிரிக்கக் கூடாது.." என்றான்.

"சிரிக்க என்ன மாப்ள இருக்கு?"

"இல்ல.. நான் ஒரு அமெரிக்க டாக்டர். நானா இப்படி எல்லாம் பேசறேன்னு தோணும்.. அதான்."

"நீங்க என்னன்னு இன்னும் சொல்லலியே.."

"ஒண்ணுமில்ல.. நேத்து ஒரு கனவு. அதுல என் குரு வந்தார். 'என் வீடு காலியாத்தான் இருக்கு. அங்க வா.. வந்து ப்ரே பண்ணு'ன்னார்."

"ஆச்சரியமாயிருக்கே.. கனவுல வந்தாரா?"

"ஆமாம்.. ஜஸ்ட் இது ஒரு சாதாரண தாட் ப்ராசஸ்ல எனக்கு ஏற்பட்ற எவ்வளவோ கனவுகள்ல ஒண்ணா இருக்கலாம். இருந்தாலும் இதை நான் நம்பறேன். அதான் உடனேயே கஷ்டப்பட்டு அட்ரஸைத் தேடிப் பிடிச்சேன். கடைசில பார்த்தா இதே அபார்ட்மெண்ட்லதான் நீங்க இருக்கீங்க.

சரிதான்.. பொண்ணு பார்க்க வரும்போது அப்படியே கனவுல என் குருநாதர் சொன்னபடி அவர் வாழ்ந்த வீட்டுல ப்ரே பண்ணிட்டுப் போயிடலாம்னு நினைச்சேன்.

அன்ஃபார்ச்சுனேட்லி, இன்னிக்கு மார்னிங் நீங்க உங்க டாட்டர்க்கு உடம்பு சரியில்லைன்னு போஸ்ட்போன் பண்ணீங்க.. இட்ஸ் ஓ.கே! நான் முன் வெச்ச காலை பின் வைக்கறதா இல்லைனு கிளம்பி வந்துட்டேன்.."

நின்ற நிலையில் வெகு அழகாய் நளினமான முகபாவங்களுடன் சொல்லி முடித்தான் மாப்பிள்ளை ராம்குமார்.

கனகமும் தொடர்ந்து தியாகராஜனோடு வந்திருந்தாள். அவன் பேசியதை எல்லாம் கேட்டு மனது நெகிழ்ந்து போயிருந்தாள்.

அமெரிக்காவில் வாழ்ந்தும் நம் கலாசார பூர்வமான விஷயங்களில்தான் என்ன ஒரு ஈடுபாடு! கரைய ஆரம்பித்திருந்தது மனது. ஆனால் நிஷா வீட்டோடு நின்று விட்டாள்.

தியாகராஜன் ராம்குமாரின் கையைப் பிடித்திருந்தார்.

"ரொம்ப சந்தோஷம் மாப்ளை... நடராஜபிள்ளை அய்யா இங்கயே எங்க கூடவே வாழ்ந்தவர். அவர் அருமை எங்களுக்குத் தெரியல. ஆனா அமெரிக்காவுல இருக்கற உங்களுக்குத் தெரிஞ்சிருக்குதே. ரொம்ப

சந்தோஷம். ரொம்ப ரொம்ப சந்தோஷம்..'' என்றார்.

''தேங்க்யூ அங்க்கிள்.. அவர் வீடு?'' அவன் திரும்பவும் தன் நோக்கத்தில் குறியானான்.

''அதோ.. அந்த வீடுதான்..'' கையைக் காட்டிக் கொண்டே முன்னால் ஓடினார்.

கதவு சாத்தியிருந்தது. தட்டினார். ஆனால் உஷா உள்ளே தன்னை மறந்து தியானத்தில் அமர்ந்திருந்தாள். நெடு நேரம் தட்டிய பிறகே கண்ணைத் திறந்தாள். அதற்குள் சாவித் துவாரம் வழியாக உள்ளே பார்த்தவருக்கு தூக்கி வாரிப் போட்டது.

ஃபேன் கொக்கியில் புடவை தூக்குக் கயிறாட்டம் தொங்கிக் கொண்டிருப்பது, அவர் கால் நரம்பையே வெட்டியது.

அதற்குள் அவளும் வேக வேகமாக புடவையைக் கட்டிக் கொண்டு வந்து கதவைத் திறந்தாள். பார்வை முதலில் ராம்குமார் மேல்தான் சென்றது. அவனும் அவளைப் பார்த்தான்.

முதல் பார்வை.. அசாத்திய ஊடுருவல். ஒரு க்ஷணம் இதயத்தில் இருந்து பூவாணம் ஒளிப் புள்ளிகளோடு சிதறுகிற மாதிரி இருந்தது.

''அம்மாடி.. என்னடா.. என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?''

தியாகராஜன் குரல் மட்டும் நடுங்கியது. ராம்குமாரும் விபரீதமாய் ஏதோ என்று புரிந்து கொண்டவன், ''ஒரு நிமிஷம் அங்க்கிள்..'' என்று அவரைக் கூர்ந்து பார்த்தான். அவரும் பார்த்தார்.

அது ஒருவிதமான பார்வை.. அவரை இதயத்தின் ஆழம் வரை துளையிட்டது. அப்படியே அவருக்குள் ஒருவித பரவசமான நிலை.. மனதிலும் புதிய புதிய எண்ணங்கள்.

சரியாக முப்பது நொடிகள்!

பார்வையை விலக்கியவன் உஷாவைப் பார்த்தபடியே வீட்டுக்குள் நுழைந்தான்.

''இந்த வீடுதான்.. இதே வீடுதான் என் கனவுலயும் வந்தது..'' என்றவன் விளக்கு எரிந்தபடி இருக்கும் பூஜை மாடத்தைப் பார்த்தான்.

வெளியே தியாகராஜனும் கைலாசமும் தங்களுக்குள் பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தனர். உள்ளே உஷாவும் அவனும் மட்டும்..

''நீங்க..?''

''நான்தான் ராம்குமார். உங்களைப் பெண் பார்க்க வருவதா இருந்தவன்..''

''அப்படியா?''

''ஆமாம்.. இப்ப உங்க மனநிலை எப்படி இருக்கு?''

''அமைதியா சலனமில்லாம இருக்கு.. எப்படினு தெரியல.''





"எல்லாம் என் குருவோட அருள். அவர் இங்க என்னை என் கூப்பிட்டார்ங்கறது புரிஞ்சிடிச்சு. உங்கப்பாவைப் பார்த்த நிமிஷம் அவருக்குள்ள இருக்கற கவலைக்குரிய விஷயங்களை என்னால உணர முடிஞ்சது. உங்க சிஸ்டரே பிராப்ளம் பண்றாங்க போல இருக்கே.."

அவன் கேட்க உஷா அதிர்ந்து போனாள்.

"இது.. இது.. எப்படி உங்களுக்குத் தெரியும்? அப்பா சொன்னாரா?"

"ஆமாம்.. சொல்லாம சொன்னார்.."

"சொல்லாம..?"

"அவர் சொல்லலை. நான் மனசைப் படிச்சேன்."

"எப்படி?"

"போகப் போக உனக்கும் புரியும் உஷா. உனக்குத்தான் குருவருள் பரிபூரணமா இருக்கே!"

"ஆச்சரியமா இருக்கு.."

"இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு.. அவர் இந்த வீட்ல வாழ்ந்த காலத்துல அவருக்கு நிறைய உதவிகள் செய்தபோல இருக்கே?"

"நானா?"

"நீயேதான்.. அவரோட புத்தகங்கள் எல்லாம் அவர் சொல்லச் சொல்ல நீ எழுதியதாமே..?"

"ஆமாம்.. என் கையெழுத்து நல்லா இருக்கும்னு அவர் என்னை எழுதச் சொன்னார்.."

"அதுதான் இப்ப உன் தலை எழுத்தையும் மாத்தி இருக்குன்னு நினைக்கறேன்."

அவனுடைய புதிரான பதில் அவளை மலங்க மலங்கப் பார்க்க வைத்தது.

"இல்லேன்னா தற்கொலைன்னா செய்துக்கிட்டிருப்பே..?"

"அது.. அது.."

"பார்த்தேனே.. சாவித் துவாரம் வழியே.. புடவை தொங்கிக்கிட்டு இருந்திச்சே.."

"அய்யோ.. கவனிச்சிட்டீங்களா?"

"கவனிச்சதாலதான் உன் அப்பாவை ஊடுருவினேன். அவர் மனசுக்கு ஒரு சேதி சொல்லியிருக்கேன். அது அவரை நிச்சயம் சமாதானப்படுத்தும். வேகமா கல்யாண ஏற்பாடும் செய்வார்.."

"எல்லாம் புதிரா இருக்கு.. எப்படி?"

"இப்ப புதிர்தான். ஆனால் நாளைக்கு இது ஒருவித யாகம்னு தெரிஞ்சிடும். அமெரிக்க மண்ணுல ரொம்ப கஷ்டப்பட்டு குழப்பமான பாடங்கள் மூலமா கத்துக்கற மெஸ்மரிசம் ஹிப்னாடிசத்தை, என் குருநாதர்



ஒரு விளக்கொளியில் ஆக்ஞா ஒளிப் பயிற்சியா எளிமையா கத்துக் கொடுத்துட்டார்.

நாம கண்டுபிடிச்ச கம்ப்யூட்டர்ல நாம இமெயில் மூலமா தகவல் சொல்ற மாதிரி பிறர் மனசுக்கும் நாம தகவல் தர முடியும்.

இங்க நினைச்சா அங்க புரை ஏறுறது இல்லையா.. அந்த அலைவரிசைல."

"அப்ப எஃப்.எம்ல கேட்ட குரல்..?"

"குருநாதர் குரலாத்தான் இருக்கணும். எனக்கு இன்னும் அந்த பாக்யம் கிடைக்கல. ஆனா உங்க பிரச்னையப் பார்த்த நொடி புரிஞ்சுக்கிட்டேன்.. இனி கவலை வேண்டாம்.."

"எப்படி.. என் தங்கை நிஷா ஒரு ராட்சஸி."

"இல்லை.. இனி அவ என் பேஷன்ட். அவ மனசுக்குள்ள தன்னைப் பற்றிய மிக உயர்வான நினைப்பு இருக்கு.. ஆனா அதைக் கொண்டு

## படித்ததில் பிடித்தது!

ஒரு ஈ பல ஆண்டுகளாக யானையின் வலது காலில் வாழ்ந்து வந்தது. 'நான் இருப்பதால்தான் யானையின் வாழ்வே சிறப்பாக உள்ளது' என்று அது நினைத்தது.



ஒருநாள், யானைக்கு வலது கால் ரொம்பவும் அரித்தது. அந்த அரிப்பைப் போக்க வாலால் அடித்தது யானை. ஈக்கு அந்த அடி மிகவும் வலித்தது. உடனே கடும் கோபமடைந்த அது, "ஏய், இவ்வளவு அகந்தையா உனக்கு! நான் இனி உன் காலில் உட்காரவே மாட்டேன். நான் போகிறேன். நீ தனியாகவே வாழ்ந்து கொள்" என்றது. யானைக்கு ஒன்றும் புரியவில்லை. அது காலை மட்டும் ஆட்டியது. அப்போது மண் துகள்கள் பறந்தன.

அதைக் கண்ட ஈ, "பார்த்தாயா..? நான் போகிறேன் என்றபோதே புயல் உருவாகிறது. என்னால் உன்னுடன் வாழ முடியாது" என்று சொல்லிப் பறந்து போனது. இந்த ஈயைப் போலத்தான் நம்மில் பலர், 'நான்' என்ற அகந்தையுடன் முட்டாள்களாக உள்ளார்கள்.

- ஸ்ரீஸ்ரீரவிசங்கர்

ரசித்தவர்: ஈ.டி.ஹேமமாலினி

அவனால பெருசா எதையும் செய்ய முடியலை.

அதாவது ஒரு மேனேஜரா ஆபரேட் பண்ற தகுதியுள்ள ஒருத்தர், சாதாரண கிளார்க்கா வேலை பார்க்க நேர்ந்தா, மன அழுத்தத்தால தப்பான கோரக்டரா மாறிப் போயிடுவார். பாக்கற வேலைல திருப்தி அடையாம, சுத்தி உள்ளவங்ககிட்ட குத்தம் கண்டுபிடிச்சு சண்டை போடுவார். அதுல சின்ன வெற்றி கிடைச்சாலும் உலகமே பரிசாக் கிடைச்ச சந்தோஷம் அவருக்கு ஏற்படும்.

உன் தங்கை நிஷாவும் அப்படித்தான். அவளுக்கு அதிகாரம் பண்ண வாய்ப்புக் கிடைச்சா போதும். வீட்ல ரொம்ப நல்ல பெண்ணாயிடுவா."

ராம்குமார் உளவியலும் ஆன்மிகமும் கலந்து பேசினான். அவளுக்கு நடப்பது நிஜமா.. இல்லை கனவா என்கிற சந்தேகம் ஏற்பட்டது.

"என்ன.. இது கனவா நிஜமானு சந்தேகமா இருக்கா?" அடுத்த நொடியே அது அவனிடம் கேள்வியானது. அவளிடம் கூடுதல் திடுக்.

"இது கனவில்லை. நிஜம்!

யோகி போன்ற குருநாதர் அருள் உள்ளவங்களோட வாழ்க்கையில எல்லா நிஜமுமே, கனவு மாதிரிதான் இருக்கும்.

இன்னும் உனக்கு சந்தேகமா இருந்தா, இப்பவே உன் வீட்டுக்குப் போ. அங்க உன் தங்கை என்னைப் பற்றிய நினைப்புல ஒரு பெரிய மாறுதலுக்கு வந்துருப்பா. பார்!

'நல்லவேளைப்பா.. இந்த ஆள் பாக்கத்தான் லட்சணமா இருக்கான். மத்தபடி தியானம், யோகானு கொஞ்சம் பட்டிக்காடாவும் இருக்கான். அமெரிக்கா போயும் இந்த முட்டாள் குணங்கள் விடலியே.. எனக்கு அந்த மாப்ளையே பெட்டர். பேசாம இந்த பட்டிக்காடே இந்த ஆளைக் கட்டிக்கட்டும். நமக்கு சரிப்பட்டு வராதுப்பா'ன்னு சொல்வா பார்.."

ராம்குமார் சொல்லி விட்டு ஒரு குறுஞ்சிரிப்பு சிரித்தான். அவள் தேங்கி நின்றாள்.

"ப்ளீஸ்.. போய்ட்டு வா. நான் கொஞ்ச நேரம் இங்க அமைதியா.."

அவள் உடனே கிளம்பினாள். வெளியே வந்தாள். தியாகராஜனும் கைலாசமும் சுவாரஸ்யமாக பல விஷயங்களைப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

உஷா வீடு நோக்கி ஓடினாள்.

கனகமும் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தவள், அவளைப் பின்தொடர்ந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்தவள் எதிரில் நிஷா!

பின்னாலேயே அத்தை கனகம்.

"ஏய் குடாக்.. எங்க போய்ட்டே. உன் ஆள் வந்துருக்கார்



பார்த்தியா?"

"என் ஆளா?"

"யெஸ்.. எனக்கு பயந்துக்கிட்டு அப்பா வாரவேண்டாம்னு சொன்னது சேம் பர்சன். நல்லவேளப்பா. இந்த ஆள் பாக்கத்தான் லட்சணமா இருக்கான். மத்தபடி தியானம், யோகானு கொஞ்சம் பட்டிக்காடாவும் இருக்கான். அமெரிக்கா போயும் இந்த முட்டாள் குணங்கள் விடலியே.. எனக்கு அந்த மாப்ளையே பெட்டர். பேசாம, இந்தப் பட்டிக்காடே இந்த ஆளைக் கட்டிக்கட்டும். நமக்கு சரிப்பட்டு வராது அத்தை..."




நிஷா ராம்குமார் சொன்னதை அப்படியே எதிரொலித்தாள். உஷாவுக்கு மயிர்க்கூச்சல் எழுந்தது. கனகமும் அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

உஷா திரும்ப ஓடினாள்.

பெருசுகள் இருவரும் பேசியபடியேதான் இருந்தனர்.

வீட்டினுள் நுழைந்தாள்.

ராம்குமார் அமைதியாக அந்த விளக்கைப் பார்த்தபடி தியானத்தில் இருந்தான்.

உஷா அவன் தியானத்தைக் கலைக்காமல் அவன் பக்கத்தில் சற்று நெருக்கமாக அமர்ந்தாள். மனம் முழுக்க ஒரே பூரிப்பு.

இந்த வாழ்க்கை, க்ஷணத்துக்கு க்ஷணம் எப்படியெல்லாம் திரும்புகிறது என்கிற ஆச்சரியம். கூடவே அவன் எப்படி அத்தனை கச்சிதமாக அவள் பேசப் போவதைச் சொன்னான் என்கிற அந்தக் கேள்வி!

✣ ✣ ✣ முற்றும் ✣ ✣ ✣